

**பகை விலகாதோ ?**

உள்ளத் தூரமும் உரையில்
துணிவும் உரைத்தபடி
வெள்ளத் தளைய துயர்மேல்
வரினும் வினைசெயலும்
கொள்ளத் தகுந்த விடுதலை
எண்ணமும் கொண்டுவிட்டால்
எள்ளத் தகுந்த பகைவில
காதோ இளைஞர்களே !

மேழம் (சித்திரை)

தி. பி. ௧௯௯௯

# தென்மொழி






"கெஞ்சுவதில்லை பிறர்பால் ! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை ; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே !

சுவடி 4 | சித்திரை தி. பி. ௧௯௯௭ (1966 ஏப்பிரல்) | ஓலை 3

# உலகத் தமிழாராய்ச்சி மாநாடு.

இத்திங்கள் 16-ஆம் பக்கலிலிருந்து 7 நாட்கள் தொடர்ந்து மலையாவில் நடைபெற்ற 'உலகத்தமிழாராய்ச்சி மாநாடு' பற்றி உலகத் தமிழர் எல்லாரும் ஒருவாறு அறிவர். பெருத்த பொருட் செலவில் மலையா அரசினர் உதவியுடனும், மலையாப் பல்கலைக்கழகத் துணையுடனும், மலையாவில் உள்ள உலகத் தமிழாராய்ச்சிக்கழகம் பெரும் பங்கெடுத்துக்கூட்டிய இம்மாநாட்டுக்கு மலையா, சிங்கப்பூர், அமெரிக்கா உருசியா, பிரித்தன், சப்பான், சயாம், செருமானி, இந்தியா, பிரான்சு, ஆலந்து, செக்கோசுலெரவேகியா, தென்மார்க்கு, பர்மா, இலங்கை, ஆத்திரேலியா, மென்சீசியா, பிலிப்பைன்சு, தென்கொரியா, சுவீட்ன், சுவிட்சர்லாந்து முதலிய சிறிதும் பெரிதுமான இருபத்தேழு நாடுகளிலிருந்தும் ஏறத்தாழ இருநூற்றுக்கு மேற்பட்ட படிநிகராளியரும் விடைமுகவர்களும் ஆங்காங்குள்ள பல்கலைக் கழகங்களின் சார்பாகவும் அரசினர் சார்பாகவும் வந்து கலந்து கொண்டனர். இவ்விந்திய நாட்டிலிருந்து ஏறத்தாழ 47 பெயர்கள் சென்றிருந்தனர். அவருள் மாநாட்டுக்கே முதற்பெரும் காரணமாக விருக்கும் தமிழ்மொழி வழங்கும் இத்தமிழகத்திலிருந்தும் பலர் சென்று இத்திருவிழாவில் கலந்து கொண்டனர்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர் : தங்கப்பா.
உரிமை, வெளியீடு : தாமரை, உலக முதல்வி.
அச்சகம் : மித்திரா, கடலூர்-1.

சிறப்பாக இம்மாநாடு தமிழர் சார்பாகவோ தமிழ் நாட்டின் சார் பாகவோ கூட்டப் பெறுமல் தமிழ் மொழியின் சார்பாகக் கூட்டப் பெற்றதாகும் என்பதை எவரும் மறந்துவிடலாகாது. அதுவும் தமிழ் மொ ழி யி ன் ஆராய்ச்சிக்கென முதலானதாகவும் பெரியதாகவும் அமைக்கப் பெற்ற மாநாடு; எனவே இம்மாநாட்டைக் கூட்டியவருள் தலைமையானவரான மலையாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. தனிநாயகம் அவர்கள், இம்மாநாட்டின் நிகழ்ச்சிகளைவிட, இதற்கு வரவிருக்கின்ற அறிஞர்கள் பற்றியே பெரிதும் கவலையும் அக்கறை யும் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறின்றி எவரெவரை அழைத்தால் தம் பெயர் நன்கு விளம்பரப்படுத்தப் பெறுமோ, அவ ரவர்களையெல்லாம், தகுதி திறம் பாராமல் கண்களை மூடிக்கொண்டு அழைத்து மாநாட்டை நடத்தியிருப்பது, இ த் த கை ய பெரிய மாநாட்டையே பயனற்றதாக ஆக்கியிருக்கின்றது என்று சொன்னல் வியப்பில்லை. இதுபற்றி ஏற்கனவே தென்மொழியில் பாவாணரவர் களின் கண்டனக் கட்டுரையொன்று வெளிவந்துள்ளது.

தமிழ் மொழியின் ஆராய்ச்சிக்கெனக் கூட்டப் பெற்ற இம் மாநாட்டுள் தமிழ்மொழியின் தோற்றம், வ ள ர் ச் சி, பரப்பு, சிறப்பு முதலியன பற்றி ஒருசிறிதாவது ஆய்ந்தோ படித்தோ கேட்டோ அறி யாதவர்களை அழைத்துத் தமிழர்களைப் பற்றியும், அவர்தம் பண்பாடு களைப்பற்றியும், கல்வெட்டுகளைப் பற்றியும், இலக்கியம்பற்றியும் வழக் காடவும் பேசவும் செய்திருப்பது விளையாட்டுப் பிள்ளைகள் விளைவித்த வேளாண்மை போலப் பயனற்றதாகவும் நகைப்பிற்குரியதாகவும் ஆக்கி யிருக்கின்றது. இந்நிகழ்ச்சிகளால் என்றுமுள தென்றமிழுக்கு எவ் வகைச் சிறப்போ வளர்ச்சியோ ஏற்பட்டுவிடவில்லை என்பதைத் துணி வாகக் கூறலாம்.

குறிப்பாகத் தமிழகத்திலிருந்து திருவாளர்கள். பக்தவத்சலம், ம.பொ. சி., நெடுஞ்செழியன், கணேசன், பி. டி. இராசன், முதலிய அர சியல் தலைவர்களும், தெ.பொ. மீ., மு.வ. இராசமாணிக்கனர், இலெ. ப. கரு. இராமனுதன், பி. நடராசன், எசு. செல்வநாயகம் முதலியபல்கலைக் கழகத் தமிழ், பிறதுறைப் பேராசிரியர்களும் இவர்களுடன் திருவாட்டி சரசுவதி பாண்டுரங்கம் முதலிய எதிலும் சேராத தேவையற்றவர்களும் இம்மாநாட்டுக்குச்சென்று வந்துள்ளனர். இவர்களுள் பெரும்பாலார்க் குத் தமிழ் மொழியறிவும், தமிழ் பற்றிய ஆராய்ச்சித் திறனும் சிறிது மில்லை என்பது வெள்ளிடைமலை. இவ்வாறிருப்பினும் இவர்கள்

அரசினர் சார்பிலும் பல்கலைக் கழகங்கள் சார்பிலும் சென்று பொதுமக்களின் பணத்தைப் பாழடித்திருப்பது இவர்கள் படைத்த செல்வாக்காலும், அரசியல் அதிகாரத்தாலுமேயன்றி வேறன்று. இத்தகையவர்களின் தேவையில்லாத ஈடுபாட்டால் பயன் பெறத்தக்க இம்மாநாடு எவ்வகைச் சிறப்பும் பயனுமில்லா தொழிந்தது என்பதை எண்ணி வருந்தவேண்டியுள்ளது.

நம் நாட்டு அரசியல் அமைப்பிலும், ஆட்சியிலும் எத்தனைக் குழப்பங்கள் இருக்கின்றனவோ, அத்தனைக் குழப்பங்களும், சிறப்பின்மைகளும் இத்தகைய மொழி, இலக்கியம் முதலிய துறைகளிலும் ஏற்பட்டிருப்பது, அக் குழப்பக்கார அரசியலார் தம் தலையீட்டாலும், தேவையற்ற செயல்களாலுமே! உலகச் சார்பில் நடைபெறும் ஒரு மொழி மாநாட்டிற்குச் செல்லும் குழுவினர்க்குத் தமிழகத்தினின்று சென்ற விடை முகவர்களுக்கும் நிகராளியர்களுக்கும் திரு. பக்தவத்சலம் தலைமையேற்றிருப்பது பிள்ளைத்தனமானதும், இழிவானதுமாகும். வேறு எந்த நாட்டிலிருந்து இம்மாநாட்டிற்கு வந்த குழுவில் அவ்வந்நாட்டு முதலமைச்சர்கள் தலைமையேற்று வந்தனர்? அவ்வாறிருக்க இங்கிருந்து சென்ற குழுவிற்கு மட்டும் திரு. பக்தவத்சலம் தலைமையேற்றுக் கொடி பிடித்துச் சென்றிருப்பது தமிழ்த் துறையின் காப்பற்ற அமைப்பையும் தமிழ்ப் பேராசிரியர்களின் கையாலாகாத் தன்மையையுமே காட்டுவதன்றி வேறென்ன? எவனும் எளிதில் நுழைந்து கொள்வதும், எக்கருத்தினையாவது கூறிக் குழப்பிக்கொண்டிருப்பதுமான தமிழகத் தமிழ்த் துறையைப்பற்றி மேனாட்டார் ஒருவரும் அறியாதபடி இங்குள்ள அரசியல் தலைவர்கள் திரையிட்டு வைத்திருக்கின்றனர். இஃது இந்த நாட்டுக்கே பெருத்த இழுக்காகும். இப்படிப்பட்ட மாநாட்டிற்குத் தலைமை தாங்கிச் செல்ல திரு. பக்தவத்சலத்திற்கு எள்ளளவும் தகுதியில்லை. மலையா சென்றவுடன் அங்குள்ள செட்டிமார்கள் வாழ்கின்ற பகுதியில் உள்ள கோயிலுக்குச் சென்று கும்ப முழுக்காட்டிக்கொண்டு நின்ற இத்திருமேனியார் இரும்புக் கடையில் ஈ நுழைந்தது போல் மொழியாராய்ச்சி மாநாட்டில் நுழைந்து என்ன கருத்தறிவித்தார்? இவருடன் போன திருவாட்டி சரசுவதி பண்டுரங்கத்தால் இம்மாநாட்டில் என்ன பயன் விளைந்ததோ, அப்பயன்தான் இவராலும் விளைந்தது. இவருடன் சென்ற பிறகட்சித் தலைவர்களும் ஊமைகளிடை உளறுவாயராக இருந்து மாநாட்டுக்குச் சிறிதும் தொடர்பில்லாதபடி ஏதேதோ பிதற்றிவிட்டு வந்துள்ளனர்.

மற்றப்படி இங்கிருந்து சென்ற பேராசிரியர்களுள் ஒருவர் ஆரிய அடிமை; ஒருவர் கோழை; ஒருவர் வழவழா கொழ கொழா. சிலர் சமற்கிருத பாதந்தாங்கிகள். ஆக உண்மைத் தமிழ் வளர்ச்சி பற்றியும் மொழியாய்வு பற்றியும் பேச இவர்களை அனுப்பி வைத்திருப்பதை விட இங்கிருக்கும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை அனுப்பி வைத்திருந்தாலும், அவர்கள் உண்மையை உண்மையென்று சொல்ல அஞ்சாதவர்களாகவும், தமிழ்மொழிப் பற்றுள்ளவர்களாகவும், ஓரளவேனும் தமிழறிவு பெற வேண்டுமென்ற துடிப்புள்ளவர்களாகவும் இருக்கின்ற காரணத்தால் ஒருசில கருத்துகளாவது அங்கு வெளிப்பட்டுத் தமிழ் மொழியின் சிறப்பியல்புகளைப் பற்றி அறிந்து கொள்ளத் துடிக்கும் மேனாட்டு மொழியாசிரியர் ஒருசிலர்க்காவது பயன்பட்டிருக்கும். அஃதின்றி உமி குற்றிக் கைசலித்த வீண் முயற்சிபோல் தமிழகத்திலிருந்து போந்த படிநிகராளியர் அனைவரும் வெளிநாடுகளைச் சுற்றிப் பார்க்கவும், இங்குக் கிடைக்காதனவும் அங்குக் கிடைக்கின்றனவுமான பொருள்கள் சிலவற்றை வாங்கி எடுத்து வரவும் இம்மாநாட்டுச் செலவைப் பயன்படுத்திக் கொண்டனரேயன்றி வேறு வகையில் தமிழுக்கோ, தமிழர்க்கோ இம்மாநாட்டால் எவ்வகைப் பயனும் விளைந்து விடவில்லை என்பதைத் துணிவுடன் கூறலாம்.

மாநாட்டிற்குச் சென்ற முகவர்களின் நிலைமையும் தகுதியும் இவ்வாறாக, மாநாடுதான் தான்கொண்ட தலைமைப் பயன் நிறைவுறுமாறு நிகழ்ச்சிகளை அமைத்துக் கொண்டதாவெனில் அதுவுமில்லை. மாநாட்டு நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், தீர்மானங்கள் முதலிய அனைத்தும் ஆங்கிலத்திலேயே இருந்தன. மணமற்ற மலர் போல் தமிழற்ற தமிழ் மாநாடு சிறப்பின்றிப் போனதுடன் அதன் நடவடிக்கைகள் வெட்கத்திற்குரியவாகவும் போயின. ஓர் உலகப் பொது நிகழ்ச்சிக்கும், சொற்பொழிவுகளுக்கும், அறிக்கைகளுக்கும், ஆய்வுகளுக்கும் தீர்மானங்களுக்கும் தமிழ்மொழி பயன்படத் தகுதியற்றது போல் அங்குள்ள நடவடிக்கைகள் இருந்தால், அந்த நடவடிக்கைகளால் தமிழுக்கு என்ன பயன் வாய்ந்துவிடப் போகின்றது? அது நீரற்ற நீச்சல் போலவும், மரமற்ற சோலை போலவும், சாரமற்ற உணவு போலவும் அல்லவா ஆகிவிட்டது! இத்தகைய நடைமுறைகளுக்கு ஒரு காரணமும் காட்டப் பெற்றது. அஃது அங்கு வந்திருக்கும் மேனாட்டு நிகராளியர் அனைவர்க்கும் புரியும் வண்ணம் இருத்தல் வேண்டியே! அந்நிகழ்ச்சிகள்

அனைத்தும் ஆங்கிலத்தில் இருந்தன என்பதாகும். நிகழ்ச்சிகள் ஆங்கிலத்தில் இருந்தன என்பதைப் பற்றியோ பிற மொழிகளில் இருந்தன என்பதைப் பற்றியோ நாம் குறை கூறவில்லை. மேனாட்டுத் தமிழாராய்ச்சியாளர் தமிழ் தெரியாத ஆராய்ச்சியாளராக விருப்பது அவர்களுக்கே இழுக்கு! ஆனால் அந்நிகழ்ச்சிகள் தமிழிலும் இல்லாம லிருந்தது பற்றியே நாம் வருந்துகின்றோம். பிறமொழி நடவடிக்கை களுடன் தமிழ் மொழியையும் பயன் படுத்தியிருக்கலாம். இதுவன்றித் தமிழின் சிறப்பைப்பற்றி ஆங்கிலத்திலேயே கூறுவது தமிழுக்கே இழுக்குத் தருவதாகும். ஏனெனில் மாநாடு கூட்டப் பெற்றிருப்பதே தமிழ்மொழி வளர்ச்சிக்காகும். இதைப்பற்றி மாநாட்டு அமைப்பாளர் கள் மிகுவாகக் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அல்லது இங் கிருந்து சென்ற படிநிகராளியராவது அத்தகைய நிகழ்ச்சிகளில் தமிழையும் பயன்படுத்துமாறு வலியுறுத்தியிருக்க வேண்டும். அன்றேல் மாநாட்டினின்று வெளியே வந்திருக்க வேண்டும். இது பற்றி திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் அங்கு எடுத்துக் கூறி யதற்கு மிகவும் மகிழ்கின்றோம்.

இவையன்றிக் கல்வெட்டாராய்ச்சி பற்றியும் பிராமி எழுத்துகள் பற்றியும் புதுவை அரிக்க மேட்டில் கண்ட பாண்டங்கள் பற்றியும் பேசிய திரு. ஐ. மகாதேவனும், பாபிலோனியா மொழியும் திராவிட மொழிகளும் 6000 ஆண்டுகளுக்கு முன் ஒரு பொது மொழியிலிருந்து தோன்றியதெனக் கூறிய இலங்கைப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த திரு. சதாசிவமும், போர்ச்சுக்கல் - தமிழ் தொடர்பு பற்றிப் பேசிய அவாய்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர். இ. சி. சோல்தன் அவர்களும், தமிழ் -- மலையாள வினைச் சொற்கள் பற்றி ஆராய்ந்த எடின்பரோ பல்கலைக் கழக ஆசிரியர் இ. ஆசர் அவர்களும் ஓரளவே தமிழ் மொழிச் சிறப்பு பற்றிப் பேசியிருப்பர் என்று தெரியவருகின் றது. (மாநாட்டு நடவடிக்கைகளும் சொற்பொழிவுகளும் இன்னும் வெளிவந்தில. அவை வெளிவரின் அவைபற்றி விரிவாகத் தென் மொழியில் எழுதப் பெறும்) இவையன்றி அங்கு வேறு பல சொற் பொழிவுகளும் தேவையற்ற நடவடிக்கைகளும் நடந்துள்ளன. இராமாயணம் பற்றி அமெரிக்கப் பேராசிரியர் திரு. ஆரி பக் பேசியுள் ளார். நாட்டியம் இசைபற்றி இங்கிருந்து சென்ற திரு. வி. பி. இராமன் விரித்துள்ளார். தமிழர்களின் பொருளியல் வரலாற்றைப் பற்றி பர். பி. நடராசன் அவர்கள் பேசியுள்ளார். இத்தகைய இராமா

யணக் கதையாராய்ச்சியும், நாட்டியம், இசை பற்றிய இக்கால அமைப்புகளும், தமிழர்களின் பொருளியல் வரலாறும் அங்குப்பேசப் படுவன அல்லவே. மாநாடு தமிழ் மொழி ஆய்வு குறித்து நடத்தப் பெற்றிருப்பது உண்மையானல், அங்குத் தமிழ்மொழிக் குடும்பம் பற்றியும், தமிழ் மொழியின் வேர்ச் சொற்கள், ஒலிகள், எழுத்தமைப்பு, மொழிச்சிறப்பு, மொழிப்பரப்பு, உலக மொழிகளுக்கும் தமிழ்மொழிக் கும் உள்ள தொடர்புகள், தமிழ் மொழியிலிருந்து கடன் பெற்ற உலக மொழிகளின் உள்ளீடுகள், இக்காலத் தமிழ் தாழ்த்தப் பெற்றிருப்பதன் காரணங்கள், அதனை உலக மொழிகளுள் ஒன்ருக உயர்த்துவதற்கான அடிப்படை முயற்சிகள் முதலியவை பற்றியல்லவா ஆராய்ச்சி செய் திருக்க வேண்டும். அப்பொழுதல்லவா அம்மாநாடு உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஆகும். இவைபற்றியெல்லாம் பேசுவதற்கு இங் கிருந்து போன திரு. பக்தவத்சலத்திற்கும் திருவாட்டி. பாண்டுரங்கத் திற்கும், திரு. கார்த்திகேயனுக்கும், திரு. மகராசனுக்கும், திரு. நடராசனுக்கும், திரு. வி. பி. இராமனுக்கும், திரு. பி.டி. இராசனுக்கும் பிறர்க்கும் என்ன தெரியும்? தலைவால் புரியாத இவர்கள் தாங்கள் அமர்ந்து பணியாற்றும் பதவிகள் காரணமாகவே அதற்குத் தகுதி யுள்ளவர்கள் ஆவார்களா? பக்தவத்சலமும், பி. டி. இராசனும், பாண்டு ரங்கமும் செல்ல அஃதென்ன அரசியல் மாநாடா? அம்மாநாட்டில் ஆற்றப் பெற்ற சொற்பொழிவுகளில் பிரஞ்சுப் பேராசிரியர் திரு. சீன். பெலியோசாடு என்பார்தாம் தொல்காப்பியம் பற்றியும் அதன் தொடர் பான தமிழ்மொழி இலக்கண இலக்கியங்கள் பற்றியும் ஓரளவு மாநாட் டின் அமைப்பை யொட்டிப் பேசினுர். இவையன்றி அம்மாநாட்டில் வேறென்ன சிறப்பான ஆய்வுகள் நடத்தப் பெற்றனவோ நாமறி யோம்; அறியின் பிறகு எழுதுவோம்.

இத்தகைய பயனுள்ள சில நிகழ்ச்சிகளுக்குத் துணையாக நில்லா விடினும் இங்கிருந்து போனவர்கள் தாங்கள் தங்கள் வாய்களையாவது மூடிக்கொண்டு வந்திருக்கலாம். அதுவன்றி பி. டி. இராசன்போன்ற வாய் மதர்மதர்ப்புற்றவர்கள் தம் தம் வாய்க்கு வந்தனவெல்லாம் அங்குள்ள தூய தமிழர்களின் முன் கூறித் தமிழுக்கு இழுக்குத்தேடி வந்துள்ளனர். பினங்கில் ஒரு தமிழ் மன்றச் சார்பாக வந்த தமிழன்பர் சிலர் திரு. பி. டி. இராசனிடம், “வடமொழியோ, பிறமொழிகளோ கலவாத தூய தனித்தமிழ் இயக்கம் தமிழர்களின் கல்வித் துறை யிலோ அரசியல் துறையிலோ, வாழ்க்கையிலோ வெற்றிகாண முடி யுமா?” என்று கேட்டிருக்கின்றனர். அதற்கு இவர், “முடியாது,

ஆங்கிலம் உலகின் பல மொழிகளிலிருந்தும் சொற்களை ஏ ற் று க் கொண்டிருப்பதால் தான் பெருமையுடன் உலகம் பூராவும் பரவி இருக் கின்றது, ஆகவே வேறு மொழிகளில் உள்ள தேவையான சொற்களைக் கடன் வாங்குவதால் தமிழ் மொழிக்கு ஏற்றந்தானே தவிர இழுக் கில்லை'' என்று திருவாய் மொழிந்துள்ளார். எத்தகைய கேள்விகளை எவரிடத்துக் கேட்கவேண்டும் என்று பினுங்குத் தமிழன்பர்களுக் காவது தெரிந்திருக்க வேண்டும். அல்லது எத்தகைய கேள்விகளுக்குத் தாம் விடை சொல்லத் தகுதியும் ஆற்றலும் உள்ளவர் என்று திரு. பி. டி. இராசனுக்காவது தெரிந்திருக்க வேண்டும். ஆங்கில மொழி யைக் கற்றுவிட்டதாலும், பட்டம் பெற்றுவிட்டதாலும் நன்ருகப் பேசுவதாலுமே ஆங்கில மொழியறிவு வாய்த்துவிட்டதாகத் தருக்கிப் பேசிவிடக்கூடாது. அத்தகைய மொழியறிவு உண்மையிலேயே வாய்த்திருந்தால் ஆங்கில மொழி கடன் கொண்டது என்று எவரும் கூறுர். ஆங்கில மொழியே கடன் மொழியாகும். பெரும்பாலான கைப்பொருள் இருந்து போதாமல் சிறு பொருளைப் பிறரிடமிருந்து பெற்ருல் அதனைக் கடன் என்று கொள்ளலாம். சிறிய கைப்பொரு ளுடன் பெரும் அளவில் பிறர் பொருளைச் சேர்ப்பதைக் கடன் என்ரு கொள்வது? மேலும் தன்னிடம் இல்லாமலிருந்தாலல்லவோ பிறரிடம் கடன் வாங்கலாம். தன்னிடம் இருக்கின்ற செல்வம் ஒருபுறம் தூசும் துருவும் மண்டிக்கிடக்க அதைப் பயன் படுத்தாமல் போலிப்பெருமைக் காக அண்டை வீட்டுக்காரனைப் போல் கடன் பெற்றுத்தான் வாழ வேண்டும் போலிருக்கின்றது என்று கருதிக் கடன் வாங்கிச் செல வழிப்பவனை ஊதாரி என்றும் சோம்பேறி யென்றும், மடயன் என்றுந் தான் எல்லாரும் கருதுவர். திரு. பி. டி. இராசன் வேண்டுமானுல் அத்தகையோரில் ஒருவராக இருக்கலாம். ஆனுல் தமிழும் அத்தகைய மொழியன்று. தமிழரனைவரும் அத்தகைய குருடருமல்லர். தமிழ் மொழியைப் பற்றிப் பேசுவதற்கு பி. டி. இராசனுக்கும், பிறருக்கும் எத்துணை உரிமையும் தகுதியும் உள்ளதோ அத்துணை உரிமையும் தகுதியும் உள்ள தமிழரும் உலகெங்கணும் வாழ்ந்து வருகின்றனர் என்பதை அவர்கள் உணரவேண்டும். அதுவரை இதுபோன்ற சொத்தைக் கருத்துகளை அவர் இனியும் கூறுதொழிய வேண்டும்.

இறுதியாக உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்திய மலையாத் தமிழர்களுக்கு ஒரு வேண்டுகோள். தமிழ் நாட்டில் உள்ளவர்கள் எல்லாரும் தமிழர்களாக இருக்கலாம். ஆனுல் தமிழ் அறிஞர்களாக இருந்துவிட முடியாது. பணச்செல்வாக்கும், பதவித் தகுதியும் மட்டும்

அறிவாற்றலுக்குச் சான்ருக முடியாது. திரு வேறு; தெள்ளியராதலும் வேறு. அதனுல் எவ்வெத் தொண்டுக்கு எவர் எவர் தகுதியானவர் என்றறிந்து அவ்வவரைத் தமிழ் நலமும் தமிழர் பண்பாடும் கெடாத மலைநாடு போன்ற பகுதிகளுக்கு அழைத்து அவ்வவற்றின் பயனைப் பெறுமாறு தமிழ் மொழி உண்மையிலேயே உலகம் முழுமையும் உணரப் பெறவேண்டும் என்ற உண்மையான ஆவலால் வேண்டிக் கொள்ளுகின்றேன். அவ்வாறின்றி நடத்தும் எத்தகைய சொற்பொழிவுகளும் மாநாடுகளும், நூற்களும் தமிழர்க்கோ தமிழ்க்கோ எக்காலத்தும் எள்ளத்துணைப் பயனையும் தேடித்தர முடியாதென்று அறுதியிட்டுக் கூறுகின்றேன்.

இதனை இதனுல் இவன்முடிக்கும் என்ருய்ந்து
அதனை அவன்கண் விடல்.

--- பெருஞ்சித்திரன்.

# 'தீபப்' புகைச்சல்...!

இம்மாதம் வெளிவந்த 'தீபம்' என்னும் தாளிகையின் ஆண்டு மலரில் 'மனம் வெளுக்க' என்னும் தலைப்பின் கீழ், தென்மொழியின் தனித்தமிழ்க் கொள்கையினையும், நான் சிறை சென்று திரும்பியதையும் தாக்கி வரையப்பட்ட ஒருகட்டுரை என் கவனத்திற்குக் கொண்டு வரப்பெற்றது. அதற்கு விடையாக அன்பர் சிலர் அவ்விதழாசிரியர்க்கே நேரிடையாக மடல்கள் எழுதிவிட்டு அவற்றின் படிகளையும் தென்மொழிக்கு விடுத்திருந்தனர். ஒருசிலர் அக்கட்டுரைக்கு நம் இதழிலேயே மறுப்பு எழுதவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அதன் பொருட்டு இதனை எழுதவேண்டி வந்தது.

தொடக்கத்தில் அக்கட்டுரையாளர் மறைமலையடிகளார் தம் தனித்தமிழ் மாண்பைக் குறைக்கும் எண்ணத்தோடு பொதுவுடைமைக் கட்சித் தலைவருள் ஒருவரான 'சீவா' வின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்டியிருந்தார். பொதுவாகப் பொதுவுடைமைக் கட்சியினர் மொழித்துறையைப் பற்றிக் கவலைப்படாதவர்கள்; எங்கோ நிகழ்கின்ற அரசியல் மேம்பாடுகளை நினைத்துக் கொண்டு, நம் நாட்டு மக்கள் அமைப்பு, பண்பாடு, நம் மொழிச் சிறப்பு, அரசியல் அறியாமை, பொருளியல் ஏற்றத் தாழ்வு முதலியவற்றை மறந்து, இங்கும் அதைப்போல் புரட்சியான அரசியல்

அமைப்புகளை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லாலும் செயலாலும் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் தனித் தமிழைப்பற்றிக் குறைத்துப் பேசுவதும், இழிப்பதும் வியப்பன்று! இவர்கள் தமிழைப்பற்றி ஏதேனும் தெரிந்துகொள்ளவேண்டும் என்று விரும்பினாலும் இவர் தம் கூட்டத்துள் உள்ள எழுத்தாளர் ஒரு சிலரின் தமிழைப் படிப்பதே போதுமென்றிருப்பவர்கள். மேலும் ஒரு மொழி, அதைப்பேசும் மக்கள் கூட்டத்துடன் எந்த அளவில் அகப்புற வளர்ச்சிக்குத் துணையாக விருக்கும் என்பதை எந்நிலையிலும் அறிந்து கொள்ளவும் ஒப்புக் கொள்ளவும் மறுப்பவர்கள். எனவே அடிகளாரின் தனித் தமிழ் எடுப்பினை அறியாது அக்கட்டுரையாளர் எழுதிய துடுக்கினை எவரும் பொருட்படுத்த வேண்டா.

இனித் தென்மொழியில் வந்த தெ. பொ. மீ. யின் கருத்துரைகளை மறுத்துரைக்க வந்த இவர், அதனுள் எழுப்பப் பெற்ற வினுக்களுக்குத் தகுந்த விடையளித்து அவரைக் காப்பாற்ற முடியாமல், நான் சிறை சென்றதையும் இடையில் மீண்டதையும் வக்கணையாக எடுத்து ‘வெளுத்திருப்பது’ இவரின் தமிழறிவின்மையையும் தமிழ்ப் பகைமையையுமே நன்கு எடுத்துக் காட்டும். அதுவன்றி என் சிறைச்செலவு பற்றியும் சிறைவீடு பற்றியும் நான் ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்திய காரண கரும உண்மைகளையே ஏதோ மக்களுக்குத் தெரியாமலிருந்தவற்றைத், தாமே கண்டு பிடித்து வெளிப்படுத்துவார் போல் ‘வெளுத்திருப்பது’ இவர் ‘வெளுப்பு’ வேலையிலும் திறமைக் குறைவானவர் என்பதற்குத் தகுந்த எடுத்துக் காட்டாகும். முறையாகத் தென்மொழி படித்திருக்க முடியாத இவ் ‘வெளுப்பார்’ இரும்புப் பட்டறையில் நுழைந்த ஈப்போலும், குன்று முட்டிய குருவி போலும் கொண்ட மதிமயக்கத்தை நான் விடுத்த அறிக்கையினை ஊன்றிப் படித்தார் தெளிவாக உணருவர். இன்றியமையாமைக் காலத்துச் சில பல அரசியல் நன்மைகளுக்காகச் சிறை சென்ற முன்னறிவும், ஆற்றலும், முனைப்பும் மிக்க தலைவர்களைப் போல் அவரைப் பின்பற்றுகின்ற தொண்டர்கள் சிலர் சிற்சிலகால் தவிர்க்கவியலாமை பற்றிச் சிறை செல்ல நேரினும், அவ்வாறு சிறை புகுந்த செயல்களையும் எண்ணிக்கைகளையுமே தம் பொதுத் தொண்டிற்கும் தந்நலமற்ற ஈகத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டாகவும் அரச முத்திரையாகவும் வைத்துக்கொண்டு, அரசியல் திறமும் உலகியலறிவும் முதிராத பொதுமக்களை ஏமாற்றிக்கொண்டு வருகின்றனர். அத்தகைய அரசியல் தில்லு மல்லுக்காரர்களுக்கும், அவர்களை நம்பித் தன்னறி

நூற்சிறப்பு.

# "பண்டைத்தமிழ நாகரிகமும் பண்பாடும்"

தமிழர் அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டிய அரிய நூல்! கருத்துக் கருவூலம்! பாவாணரின் அஃகி யகன்ற அறிவுக்குச் சான்று! ஆரியத் தில்லுமல்லுகளுக்கு ஓர் அறைகூவல்!

அண்மையில் வெளிவந்த பாவாணர் அவர்களின் அரிய ஆராய்ச்சி நூலாகிய "பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்" சிறந்ததொரு வரலாற்று நூல். ஆனை புகுந்த அருங்களம் போல் ஆரியர் புகுந்து விளையாடிய இத்தமிழக மண்ணின் மறைந்த பண்பாட்டையும் ஒப்பற்ற உயர்ந்த நாகரிகத்தையும் இலக்கண இலக்கிய வழக்குகள் வாயிலாகவும், தம் நுண்மாண் நுழைபுல வன்மையினாலும் உய்த்துணர்ந்து வெளிப்படுத்திய இந்நூல் பாவாணரின் செம்மாந்த புலமைக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாம்.

தமிழரின் பண்டை நாகரிகத்தினையும் பண்பாட்டையும் விளக்குவதற்காக இதுவரைப் பலராலும் எழுதப் பெற்ற நூற்கள் அனைத்தும் இந்நூலின் பீடு நடையையும் ஆய்வொளியையும் கண்டு கதிரவன் முன் பனியாய்க் கரையுந் தகையன. ஆரியர்தம் மதிமயக்குகளிலும், சொற்புரட்டு செயற் புரட்டுகளிலும், தமிழர்தம் தன்மானத்தையும் நல்

---

முன் பக்கத் தொடர்ச்சி.

வும் தன் முனைப்பும் இழந்த பேதையர்க்கும் நாம் கூறுவது உள்ளே புகைச்சலையும் வெளியே பகைமையையும் கூட ஏற்படுத்தி விடலாம். அதற்காகச் சில உண்மைகளை நாம் கூறாமல் இருக்க முடியாது. இத்தகைய அரை வேக்காட்டு அரசியல்காரர்கள் நாம் செய்யும் வினைப்பாடுகளையும், அவற்றிற்குக் காரணமாகும் தமிழின் ஆற்றலையும், அவற்றால் ஏற்படப்போகும் மாறுதல்களையும் பொறுத்திருந்து பார்க்குமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன். அதுவரை இது போன்ற புல்லிய உரைகளுக்குச் செவி சாய்த்துத் தம் செயல் திறத்துக் குன்றிவிடாதிருக்குமாறு உண்மைத் தமிழன்பர்களையும் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

--- பெருஞ்சித்திரன்.

லறிவையும் இழந்து, தம் பழம் பண்பாட்டையும் உலகம் வியக்கத்தக்க ஒப்புயர்வற்ற உயர்ந்த நாகரிகத்தையும் மறந்து, கீழ்மையுற்று இழிந்து வரும் இந்நேரத்தில் பாவாணரின் இத்தகைய நூற்கள் அவர் தம் மதிமயக்கங்களைப் போக்கும் அருமருந்தாகப் பயன்படும் திறன் சான்றன.

" கழகக் காலம் என்ற ஒரு காலம் இருந்ததில்லை; தமிழர் நாகரிக முற்றதும், இலக்கிய இலக்கணம் பெற்றதும் மிகமிகப் பிற்பட்ட காலத்தேதான் " என்று தான்தோன்றித் தனமாகப் பிதற்றிவரும் பேராசிரியர் எனப்படுவார் தம் மண்டை நசுங்கும்படி பாவாணர் அடித்த அடிகள் இந்நூலுள் கணக்கில. "மேனாடுகளுள் முதன் முதல் நாகரிக மடைந்தது எகிபது (Egypt). அதன் தொடக்கம் கி. மு. 4000 ஆண்டுகட்கு முன். இதற்கும் முந்தியது தமிழ் நாகரிகம். அதன் தோற்றம் கி. மு. 10,000 ஆண்டுகட்கு முன். ஆகவே தமிழ் நாகரிகமே உலகில் முதன் முதல் தோன்றியதாகும்" என்று பாவாணர் தம் முன்னுரையில் கூறியதற்கேற்ப அழுத்தமான சான்று களை நூலெங்கணும் ஊன்றி வைத்துள்ளார். இவற்றைப் பொய் யென்று கூறி வயிறு வீங்கிக் கிடக்கும் போலித் தமிழ் ஆராய்ச்சிக் காரர்கள் தம் நெஞ்செலும்புகள் நொறுங்கிப் போகுமாறு பாவாணர் விட்ட குத்துகளின் தழும்புகள் நூல் முழுவதும் தட்டுப்படுகின்றன.

" . . . . இங்ஙனமிருப்பவும், ஆரியச் சூழ்ச்சியாலும் ஆரிய வருகைக்குப் பிற்பட்ட மூவேந்தரின் பேதைமையாலும், பல்வகைப்பட்ட கொண்டான்மாரின் (வையாபுரிகளின்) காட்டிக் கொடுப்பாலும், தமிழ் நாகரிகம் மேனாட்டாருக்குத் தெரிந்த அளவு கூடத் தமிழருக்குத் தெரியாது மறையுண்டு கிடக்கின்றது. இவ்விரங்கத் தக்க நிலைமை தமிழரின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருத்தலால், இதை நீக்குதற்பொருட்டு இந்நூலை எழுதத் துணிந்தேன் " என்று ஆசிரியர் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். தமிழர் தம் அறியாமைக்கிரங்கி அவர்க்காகப் பாவாணர் பொருதும் இடங்கள் பல உள. " இற்றைத் தமிழருள் நூற்றிற் கெண்பதின்மர் தற்குறிகளும் தாய்மொழியுணர்ச்சி யில்லாதவருமாயிருப்பினும், புதுத் தலைமுறையாக முளைவிட்டுக் கிளர்ந்தெழும் தமிழ மாணவ மணிகளேனும் இதைக் கருத்தூன்றிப் படித்துத் தம் முன்னோரின் நாகரிகப் பண்பாட்டைப் புதுக்கிப் போற்றிக் காப்பாராக" என்று விடுக்கும் அவர் வேண்டுகோளுக்குத்

தமிழன் ஒவ்வொருவனும் குறிப்பாக ஒவ்வொரு மாணவரும் செவி சாய்த்துக் கட்டாயம் இதனை வாங்கிக் கற்குமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

இந்நூலில் நெடுநாட்களாகத் தமிழரின் திரிந்துபோன மூளையைக் குழப்பிக் கொண்டு வரும் பலவாறான ஐயங்கள் தெளிவு படுத்தப் பெற்றுள்ளன. சமற்கிருதத்தில் பொறியியல் நூற் கருத்துகள் உள்ளதாகப் பொய் வழக்காடி வரும் திரு. பக்தவத்சலம் போன்றோர் தம் வல்வாயடங்குமாறு தமிழர்தம் இசை, நாடகம், மடைநூல், மருத்துவம், மணிநோட்டம், ஓவியம், உருவம், கட்டிடம், பொறிவினை. பொன், இதள் மாற்றியம் (இரசவாதம்) மறம், ஓகம் மாயம், வசியம் மந்திரக்கட்டு, மகிடி, பேயோட்டம், குறளி, செய்வினை, கரவடம், உடலியல், காவல் முதலிய துறைகளில் அமைந்த அரிய கலைநூற்கள் பற்றியும், இலக்கணம், மொழி, அறம், பொருள், இன்பம், மறை, பட்டாங்கு, அளவை, ஏரணம், வாணியல், கணியம், கணக்கு, உடற்குறி, புள்ளியல், கனு, உளவியல், பூதவியல், நிலவியல், நீரியல், வரலாறு, திணை முதலிய அறிவியல் நூற்கள் பற்றியும் கோழி நூல், பரி நூல் யானை நூல், திணை நூல் முதலிய உயிரியியல் நூற்கள் பற்றியும் பாவாணர் தமக்கேயுரிய அரிய ஆராய்ச்சித் திறன் கொண்டு விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்துள்ளார்.

முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ் மொழியின் சொல்லிலும் எழுத்திலும் ஒலியிலும் மூழ்கிக் கிடக்கும் பாவாணரவர்களின் முதிர்ந்து விளங்கும் மொழியறிவும் வரலாற்றறிவும் இந்நூலின் தொடக்கத்திலிருந்து முடிவு வரை தெளிவாகப் புலப்படுத்தப் பெற்றுள்ளன. "தமிழின் தொன்மையையும் முன்மையையும் அறியாத வரலாற்றாசிரியர் ஆரிய வேதக் காலத்தையே அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டு வரலாற்றைத் தொடங்கும் தவறான வழக்கம் இன்னும் இருந்து வருகின்றது. தமிழ் வேத ஆரியத்திற்கு முந்தியதாயிருப்பதோடு வேதப் பெயர்களே தமிழ்ச் சொற்களின் திரிபாகவுமிருக்கின்றன" (பக்கம் 11) என்று ஆசிரியர் வெளிப்படுத்தும் உண்மைக்குக் காட்டப் பெறும் சான்றுகள் ஆரிய அடிவருடிகள் தம் உச்சி மண்டையில் உரத்து அறைந்த ஆணிகளாகும். "இந்திய நாகரிக அடிப்படை தமிழ் நாகரிகமே. ஆயினும், இன்று அஃது அறியப்படாமலிருப்பதற்குக் கரணியம், ஆரிய வருகைக்கு முற்பட்ட தமிழிலக்கியம் அனைத்தும் அழிந்தும் அழிக்கப்பட்டும் போனமையும், ஆரியக்குலப் பிரிவினை

யால் தமிழர் பலவகையிலும் தாழ்த்தப்பட்டிருப்பதும்; இவற்றிற்கு நேர் மாருக இந்தியக் கலைகளும் அறிவியல்களும் மொழி பெயர்த்து எழுதப்பெற்றுள்ள சமற்கிருத நூல்களே இன்றிருப்பதும், அவற்றை யெல்லாம் முதனூல்களே யென்று வடவர் வலிப்பதும், குலவரிசை யிலும் கல்வித் துறையிலும் ஆரியர் உயர்த்தப் பட்டிருப்பதுமே'' (பக்கம் 13) என்ற ஆசிரியரின் கூற்று, வரலாற்ருசியர் என்றும் மொழிப் பேராசிரியர் என்றும் கூறிக்கொண்டு, பொது மக்களையும் மாணவர்களையும், பிறநாட்டினரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கும் கோடரிக் காம்புகளுக்கும், பிராமணப் பித்தர்களுக்கும் விடுத்த வலிந்த ஓர் அறைகூவலாகும்.

மற்றப்படி நூலின் எல்லாச்சிறப்புகளையும் இங்கெடுத்துக் கூறல் இயலாத தொன்ருகும். பொதுவாகச் சொன்னல் பாவாணரவர்கள் எழுதிக் கொண்டுள்ள வரலாறு, சமயம், மொழி, இலக்கண இலக்கியம் பற்றிய முப்பது நூற்களும் வெளிவரின் இன்றுள்ள தமிழர்தம் அறியாமை முற்றும் அகல்வதுடன் இனிவரும் தமிழினத் திற்கும் அஃதொரு கேடயமாகவும் கைவாளாகவும், விளங்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. இக்கால் தமிழர் ஒன்றைத் தெள்ளத் தெளிவர்க உணர்ந்து கொள்ளல் வேண்டும்; தமிழர்களுள் இன்னொரு மறைமலையடிகள் தோன்றலாம். ஆனல் இன்னொரு பாவாணர் தோன்றுதல் அரிதினும் அரிதாம். எனவே அவர்தம்மைத் தமிழகம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாக. தென்மொழியன்பர் ஒவ்வொருவரும் இந்நூலைக் கட்டாயம் வாங்கிப்படித்துப் பயன் துய்க்குமாறு வேண்டிக் கொள்ளுகின்ருேம். **-பெருஞ்சித்திரன்,**

**விலை: 6-25 உருபா.**

**[கிடைக்குமிடம்: தே. அடியார்க்கு நல்லான்,**
ஆ. 1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை.
காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.) ]

---

## அன்பர்களுக்கு

தென்மொழி அச்சகத்திற்கு அரசினர் இசைவளிக்காமையால் படும் தொல்லைகளாலும், போராட்டங்களினுலும் இவ்விதழ் மிக மிகச் சுணங்கி வருகின்றது. இனிமேலும் இவ்வகைத் தாழ்த்தம் ஏற் படா வண்ணம் தகுந்த முன்னேற்பாடுகள் எடுக்கப்பெற்று வரு கின்றன. அன்பர்கள் பொறுத்துக் கொள்க. ( - ஆ-ர் )

# இலக்கிய நண்பீர் !

ம. இலெ தங்கப்பா.

செஞ்சொற் பெருநூல் படைக்கப் பிறந்தோம்; செழுந்தமிழ்க்காய்
வெஞ்சொற் கிளர்ச்சி விரும்பிலம் என்பர்; விளித்துரைப்பேன்:
நெஞ்சைப் பிழிந்து தமிழ்ப்பயிர் காக்கும் நெடும்பணியின்
விஞ்சித் திகழும் இலக்கியம் உண்டோ, விளம்புகவே?

எரியும் தழலிடைக் கூரை பொசுங்க இடிந்து சுவர்
சரியும் பொழுதில் இனிதின் அமர்ந்தொரு தாய் மகவின்
புரையில் முகம் பார்த் தொருதா லாட்டுப் புனைகுவளோ?
அரிதின் இலக்கியம் செய்வமென் றுரைப்பீர், அறைகுவிரே!

வடவன் ஒருபுடை, பார்ப்பான் ஒருபுடை, வால்பிடி நம்
மடவன் ஒருபுடை தாக்கிடச் செந்தமிழ் மாய்தலெண்ணீர்,
அடையும் இலக்கியம் நும்தலைக் கீடாய் அகன்றுறைவீர்
கடைமை இதனினும் உண்டோ தமிழ்க்கும் கடன் மறப்பே?

தீயரின் சூழ்வால் தியங்கும் தமிழ்க்கோர் திறம் புரியீர்
போயுறும் இன்ப இலக்கியம் யாப்பீர்! புகல் மனையாள்
நோயுறும் போழ்தும் அவள்பால் இன்பம் நுகர்ந்திருக்கும்
பேய்மையே போலும் இலக்கியம் வேட்கும்நும் பெற்றியதே!

உள்ளத் துயர்வை வடியீர்; உயர்கலை யாத்தளியீர்
விள்ளத் தகுமெய் வாழ்வை விளம்பீர்; வெறி மிகுத்துக்
கள்ளொத் துவட்டுபொய்க் கற்பனை மூழ்கிக் கதை புனைவீர்
எள்ளத் தகும் நும் இலக்கியம் வாழ்க்கைக் கெனைப்பயனே?

துன்பொடு வன்பகை சூழும் பொழுதில் துணைபுரியா(து)
இன்புள போல் உவப் பாடுதல் நன்றோ? இடர் இலதாய்த்
தின்பதே எண்ணித் திரிபவர் நெஞ்சம் தெளிவுறுமோ?
என்புரு காமல் இலக்கியம் உண்டோ இயம்புகவே!

விண்ணூர் வியப்பை, வியன்நெடுங் குன்றை விரிகடலைத்
தண்ணூர் பொழிலைப் பொழில்தருங் காதல் தலைநலத்தை
எண்ணு திருப்பவர் அல்லோம்; எனினுமிங் கேதிலர் கைப்
புண்ணுந் தமிழை நினைதலின் இங்ஙன் புலம்புவமே!

தமிழ்க்கொரு காப்பும், அரசும் உளவேல் தமிழ்ச்சுவை நூல்
கமழ்ப்புற யாத்துக் களிப்போம்; எனினும் கடல் நடுவில்
அமிழ்ப்புறு நாவாய் வலித்திட ஆளின் றலமருங்கால்
குமிழ்ப்புறு தென்பாங் கிசைப்பவர் தம்மையென் கூறுவதே!

# இந்திய நாகரிகம் ஆரியரது எனக் காட்டக் கையாளப்படும் வழிகள்.

1. பழந்தமிழ் நாடாகிய குமரிக்கண்ட வரலாற்றை மறைத்தலும் மறுத்தலும்.
2. பாண்டியர் நிறுவிய முத்தமிழ்க் கழக உண்மையை மறுத்தல்.
3. தமிழ்நாட்டு வரலாற்றை வடக்கினின்றும் வேதக் காலத்தினின்றும் தொடங்கல்.
4. தென்னாட்டுப் பழங்குடி மக்களாகிய தமிழரை வந்தேறிகளாகவும் கலவையினமாகவும் காட்டல்.
5. தமிழ் முன்னூல்களையும் முதனூல்களையும் பின்னூல்களாகவும் வழி நூல்களாகவும் காட்டல்.
6. குமரிக்கண்ட இடப்பெயர்களையும் தெய்வப் பெயர்களையும் மூவேந்தர் குடிப்பெயர்களையும் ஆரியச் சொல்லாகக் காட்டல்.
7. கட்டுக் கதைகளையும் ஆரியச் சொற்களையும் புகுத்தி, இரு பெருந் தமிழ்ச் சமயங்களாகிய சிவ நெறியையும் திருமால் நெறியையும் ஆரிய வண்ணமாக்கலும், தமிழைக் கோயில்வழி பாட்டிற்குத் தகாததென்று தள்ளலும்.
8. மூவேந்தர் பேதைமையால் ஆரியம் வேரூன்றிய கடைக் கழகக் கால நூல்களினின்று ஆரியச் சார்பான சான்று காட்டல்.
9. தமிழ் வடமொழிக் கிளையென்று அயலார் கருதுமாறு, அடிப் படைத் தமிழ்ச் சொற்கட் கெல்லாம் வலிந்தும் நலிந்தும் வட சொன் மூலங் காட்டல்.
10. வடமொழி தேவமொழியென்றும், பிராமணர் நிலத்தேவர் (பூசுரர்) என்றும், வேத்க்கால ஆரியப் பூசாரியரால் புகுத்தப் பெற்ற ஏமாற்றுக் கருத்துகளையும், பிறப்புத் தொடர்பான குலப் பிரிவினையையும் தொடர்ந்து போற்றல்.
11. சமயச் சார்பான சொற்பொழிவுகளாற் பொதுமக்களை அறியாமையில் அழுத்துதல்.
12. உண்மை கூறும் தமிழ்ப் புலவர்க்கு அலுவற் பதவியில்லாவாறு செய்தல்.

-- ஞா. தேவநேயப் பாவாணர்.

---

''தான்'' எனும் வாழ்க்கையின் புன்மை தவிரார்; தமிழ் நினையார்
வானுல கேறி உடுமணி கோத்து மதி பிழிந்தே
கானலை உண்டனம் என்று கதைக்குவர் கற்பனைதாம்
பானுரை போல்எழில் கூட்டும்; கழிப்பிற் பயனிலையே!

இன்றே தமிழ்க்கு விடுதலை எய்தின் எவர்க்குமுன்யாம்
இன்றே வருவம்! இறவா இலக்கியம் யாம் தருவோம்!
மன்றுர் தமிழே இலையெனின் பின்புநம் வாழ்வுமுண்டோ?
ஒன்றால் அமைந்தோம், இலக்கிய நண்பீர், உணருகவே!

## கப்பலையும் பிற கடற்கலங்களையும் குறிக்கும் உலக மொழிச்சொற்கள் அனைத்தும் தமிழ்ச் சொற்களின் திரிபே!

கலங்கள் முதன் முதல் தமிழகத்திலேயே செய்யப்பட்டன. அதனால் பல கடல் துறைச் சொற்களும் கலத்துறைச் சொற்களும் மேலையாரி யத்திலும் கீழையாரியத்திலும் தமிழாயிருக்கின்றன.

வாரி - நீர். பெரிய நீர்நிலையான கடல். L. Mare, Skt. Var

வாரணம் - கடல். L. Marinus E. Marina. Skt. Varuna (வாருண)

வார்தல் - நீள்தல். வார் - வாரி, ஒ. நோ. நீள் - நீர்.

வார் - வாரணம் - பெரிய நீர் நிலை அல்லது வளைந்த நீர் நிலை.

கரை - கடற்கரை.

E. Shore - Land that skirts sea or large body of water (C. O. D.)

G, (K) - Sh. ஒ. நோ: L. curtus - E - short.

படகு - LL - barca, Gk. baris. E. bark.

ML. barga, variation of barca. E. bage.

L - ர. ஒ. நோ: பட்டடை - பட்டரை, அடுப்பங்கடை - அடுப்பங்கரை, படவர் - பரவர்.

கொடுக்கு - ME croc; ON. Krokr. E. crook, குடகு - E. Goorg.

நாவாய் - L. Navis, Gk. nans. Skt. nav, E navy (கப்பற் படை)

நாவுதல் - கொழித்தல். நாவாய் கடல் நீரைக் கொழித்துச் செல்வது.

கடலையும் கப்பலையும் காணுதவரும் நெடுகலும் நிலவழியாய் ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு வந்தவருமாகிய ஆரியர், 'நௌ' என்னும் (படகைக் குறிக்கும்) வடசொல்லினின்று நாவாய்ச்சொல் வந்த தென்பது, வாழைப்பழத் தொலியை நட்டால் வாழை முளைக்கும் என் பது போன்றதே.

கப்பல் - L. Scapha, Gk. Skaphos, Ger. Schiff. OHG. Scif. OS. ON. Ice. Goth. Ship. OE. Scip F. esquif, Sp., Port, esquife, It Schifo E. Skiff, ship.

கப்புகள் (கிளைகள்) போன்ற பல பாய்மரங்களை யுடையது கப்பல். L. Galea, Gk. Galaia, E. Galley, Galleon முதலிய சொற்களும், கலம் என்னும் தென் சொல்லோடு ஒப்பு நோக்கத்தக்கன.

OS. OE. Segel, OHG. Segal, ON, Segl, E. Sail என்னும் சொற்களும் சேலை என்பதை ஒத்திருப்பது கவனிக்கத் தக்கது.

இங்ஙனம் கட்டுமரம் (E. catamaran) முதல் கப்பல் வரை, பல வகைக் கலப்பெயர்கள் மேலையாரிய மொழிகளில் தமிழாயுள்ளன.

நங்கூரம் - L. ancora Gk. angkyra, Fr. ancre, E.ancher Pers. langar, கவடி- E. cowry. (ஞா. தே.)

# ஐந்திரம்.

க. ப. அருணாசலம். பி. ஓ. எல்.,
தமிழ் ஆராய்ச்சித்துறை, திருவனந்தபுரம்.

"மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப்பியன்"

என்பது தொல்காப்பியப் பாயிரத்துள் வருந்தொடர். இது பனம்பாரனாரால் இயற்றப்பெற்றது. பாயிரம் எப்பொழுது இயற்றப்பட்டது என்ற செய்திக்குச் செல்லாமல், அப்பாயிரங்கொண்டு, தொல்காப்பியர் காலத்தை வரையறுப்பதற்கு உடன்பட்டு எழுந்ததே இக்கட்டுரை.

'ஐந்திரம்' - என்ற சொற்றொடர் எதனைக் குறித்தது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம். இதுவரை "ஐந்திரம்" என்பதைப் பேராசிரியர் பலரும் ஒரு நூல் எனவே கொண்டுள்ளனர். ஐந்திரம் பற்றிய காலவேறுபாடு பற்றிய கருத்து வேறுபாடு உண்டே ஒழிய - அது 'நூல்' (வியாகரணம்) என்பதில் கருத்து வேற்றுமை எழவில்லை. பிறிதொரு சாரார் 'ஐந்திறம்' எனப் பாடம் ஓதி, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களைக் குறித்தது என்பர்.[1] இத்தகு பகுப்புமுறை பிற்காலத்தது. தொல்காப்பியர் காலத்து இருந்தது என்பதற்கான வலிவான சான்றுகள் இல்லாமையால் இக்கருத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. பாயிரத்தில், 'எழுத்தும்' சொல்லும், பொருளும் நாடி' எனத் தெளிவாக மூன்று பகுப்பு முறைகள் கூறப்படுகின்றன. ஐந்திலக்கணங்களைத் தொல்காப்பியர் கூறியுள்ளார் என்றுற்கூட "ஐந்திறம்" - எனக்குறிக்கும் வழக்கம் இல்லை. அவ்வாறு பிற்கால இலக்கண ஆசிரியர்கள் யாரும் வழங்கவும் இல்லை.

ஓர் இலக்கண ஆசிரியன், தமிழ் மொழிக்கு இலக்கணம் செய்யும் பொழுது, அவ்வாசிரியனுக்கு வேறொரு மொழி நூல், முதலாக இருக்க முடியாது என்ற பொதுவான கருத்தை எண்ணிச் சிலர், இந்திரன், வடமொழி இந்திரன் அல்லன். தமிழ் மண்ணிலே வாழ்ந்த தமிழன்தான் இந்திரன் எனக் கொண்டனர். இன் + திறன் > இந்தி

1. தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம் பண்டித. அ. இ. நாயுடு, பக்கம் 11.

ரன் ஆயிற்று என்பது அவர்தம் கொள்கை.[2] ஒப்பு நோக்குக: உடன் + பாடு > உடம்பாடு: (குறள் 893) பாயிரத்தை, ஒருமுறைக்குப் பன்முறை நுணுகி ஓதும்பொழுது, சில புது எண்ணங்கள் ஏற்படுகின்றன. ஒன்றையே கேட்டுக்கேட்டு, படித்துப்படித்து - வருகின்ற நமக்குச் சில தவறான மரபு வழி எண்ணங்கள் உள்ளத்தில் ஊறி விடுகின்றன. இந்த மரபு வழி உணர்வுகள், நம்மைப் புதிய நெறியில் எண்ணவிடுவதில்லை. அப்படிப் பிறரால் எண்ணிச் சொல்லப்பட்டாலும் இந்த மரபு வழி உணர்வு, அந்தப் புதிய கருத்தை மனம் ஏற்காதவாறு தடுத்து விடுகிறது. இந்த நிலையினின்று நாம் விடுபெற வேண்டும். அவ்வாறு விடுதலை பெற்று, என் கருத்தை உன்னுமாறு உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

'ஐந்திரம்' என்ற தொடர் ஐந்திர 'வியாகரண'த்தைக் குறிக்கவில்லை. அதற்கான காரணங்கள் :

(1) இந்திரனாற் செய்யப்பட்ட நூல், அவனது பெயராலேயே 'இந்திரம்' என வழங்க வேண்டுமே ஒழிய 'ஐந்திரம்' என வழங்குவது பொருந்துமாறில்லை. "இ" - என்ற உயிர்க்கு ஈ, ஏ, என்பனவே இன எழுத்துகள். "ஐ," - என்பது இன எழுத்தன்று. மேலும் நேமிநாதன் - நேமிநாதம் செயிற்றியனார் -- செயிற்றியம் என்ற வழக்குகளையும் பார்க்க.

(2) பாயிரத்தின் தொடக்கப் பகுதியில், 'முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி' - என முந்து நூல் என்று தொல்காப்பியர் அறிந்த நூலைச் சுட்டிக் காட்டிவிட்டார். பின்னரும், வேறொரு நூலான ஐந்திரத்தைச் சுட்டவேண்டியதில்லை. அவ்வாறு கொள்ளின் 'கூறியது கூறல்' என்ற குற்றத்தின்பாற் படும்.

(3) தொல்காப்பியத்தில் ஆங்காங்கே ஏறத்தாழ 200-க்கும் மேற்பட்ட இடங்களில் "என்ப, என்மனார்" போன்ற சொற்றொடர்களைப் பார்க்கிறோம். தமக்கு முன்புள்ள இலக்கண ஆசிரியர்கள் "சொன்னார்கள்" எனப் பன்மையிலேயே எங்கும் சுட்டிச் செல்கிறார். எந்த ஒரு தனியாசிரியனும், சொன்னதாகவோ தாம் பின்பற்றியதாகவோ- எங்கும் அவர் சுட்டவில்லை. அப்படி இருக்கும்பொழு 65

2. மன் + திறம் > மந்திரம் எனக்காட்டுவர் பாவாணர் ஒப்பியன் மொழி நூல் பக்கம் 141.

அவர் "ஐந்திரம்" என்ற ஒரு நூலை மட்டும் கற்றிருந்தார், பின்பற்றி ஞர் என்பது போலப் பொருள் கொள்ளுவது பொருந்தவில்லை.

[ஐந்திரத்தைப் பின்பற்றினுர் என்பதுபோல, சேனுவரையர் உரை செய்வர். சொல். வேற்றுமை -- 74]

(4) பாயிரத்தில்

" வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல், கண்டு" என்று வருகின்றது.

தமிழ் நாட்டில், தமிழக எல்லையில், தமிழ் மண்ணில் கிளைத்த வழக்கையும், செய்யுளையும், கொண்டு, எழுத்து, சொல், பொருள் நாடிச் செந்தமிழினது இயல்பு பொருந்தின செந்தமிழ் நிலத்தொடு முந்து நூல் கண்டார். ஒரு மொழியின் இலக்கணம் கூறப்போகும் ஆசிரியன் அம்மொழி வழங்கும் எல்லை, அம்மொழியின் வழக்கு, செய்யுள், முந்து நூல் இவற்றையே கற்றிருக்க வேண்டும் - கற்றிருந்தார் தொல்காப்பியர் என்பது பாயிரக் கருத்து. 'தமிழ் கூறும் நல்லுலகத்து இலக் கணம் கூறப் புகுந்த ஆசிரியன்'; 'சமற்கிருதம் கூறும் நல்லுலகத்து இலக்கணத்தைத் கற்றிருந்தார்' என்பது அறிவுக்குப் பொருத்தமாக இல்லை.

(5) ஐந்திர 'வியாகரணம்' எக்காலத்தும் இல்லை. இந்திரன் இலக்கணம் செய்ததற்கும் முறையான சான்றுகள் இல்லை[1].

(6) தமிழ் இலக்கண நூற்கட்கு - ஐந்திரம் வழிகாட்டியாக இருந்தது என்பது பிற்கால இலக்கண ஆசிரியர்களால் [2] போற்றப் பட்டதாகத் தெரியவில்லை.

1. தமிழ்ச்சுடர் மணிகள். பேரா. வையாபுரியார், தொல்காப்பியம் 'காலம்'

1. தொல்க...க்கிய உரையாளரான அடியார்க்கு நல்லாரைக் கொண்டுக் பக்கம் 11...து சரியன்று.

(7) 'ஐந்திரம்' நூல் ஆயின் 'நிறைந்த' என்ற பெயரெச்சம் பொருத்தந்தானு? படித்தல், கற்றல், ஓதல், அறிதல், தொடுதல், உணர்தல் போன்ற வினைகளைச் சொல்லியிருக்க வேண்டும்.

நூல் - கற்றல், படித்தல் . . . . . என்பதே முறையான, தெளிவான தொடர். 'தண்டி கற்றவன்' என்று சொல்வோமே ஒழிய 'தண்டி நிறைந்தவன்' என்று சொல்வோமா?

> நிறை-- என்ற சொல் அழிவின்மை, ஆடூஉக் குணம் நான்கில் காப்பன காத்துக் கடிவன கடியும் திண்மை, இடை, உறுதிப்பாடு, கற்பு, துலாம், நேர்மை, நிறுத்தல் அளவு, நிறையென்னேவல், நிறைவு, நீர்ச்சால், நூறுபலம், மாட்சிமை, வரையறை, (கழகத் தமிழ் அகரவரிசை - பக். 558)

எனும் பொருள்களை உணர்த்தும். 'கற்றல்' என்ற பொருள், நிறை என்ற சொல்லிற்கு இன்மை அறிக. அன்றியும் தொல்காப்பியத்தில் யாண்டும் கற்றல் என்ற பொருளில் 'நிறை' என்ற சொல் ஆளப்படாமையும் இக்கருத்தை வலியுறுத்தும்.

| | |
|---|---|
| நிறை - | நூற்பா 735, 757, 887, 888, 894, 900, 937, 1004, 1025. 1092, 1258, 1434. |
| நிறைக்கும் - | 41 |
| நிறைந்த - | 1057 |
| நிறைந்து - | 838 |
| நிறைய - | 166, 1284 |
| நிறையவும் - | 1327 |
| நிறையும் - | 164, 169, 319, 389, 436, 474, 477, 601, 1098 |
| நிறையே - | 1219 |
| நிறைசு - | 42, 815 |
| நிறைவும் : | 44 |
| நிறையிற்கும் - | 170 |

**மேற்காட்டப்பட்ட 32 இடங்களிலும் நிறைந்த என்பதற்குக் "கற்** **"உணர்ந்த' என்ற பொருள் இல்லை.**

**(51-ஆம் பக்க**

# இலக்கியம்



சிறு பாவியம்.

# ஐயை

துரை மாணிக்கம்

நூலுட் புகுமுன் ஒருசில....

பெண் உடலில் மென்மையானவள். உள்ளத்தில் வன்மையானவள். உணர்விலோ ஆழமும் அகற்சியும் கொண்டவள். பல்லாயிரம் எண்ணக்கால்கள் அவள் உள்ளத்தில் ஊன்றியுள்ளன; அவற்றிற்குச் சிறகுகள் உண்டு; வல்லமை உண்டு. அவ்வெண்ணங்கள் ஒன்றில் ஊன்றாமலிருக்கும் வரை, அவளை நிலைப்படுத்த எவராலும் இயலாது. ஒன்றில் ஊன்றிவிட்டாலோ அவற்றைச் சிறிதே பெயர்க்கவும் எவராலும் முடியாது. எத்துணைத் துயர் வந்தாலும் அவள் அந்நிலையினின்றும் விலகவே மாட்டாள்! பெண்ணின் உள்ளம் மற்றொரு பெண்ணாலும் அறியப்படாத கடலடி; மலைமுகடு; அகன்று விரிந்த வானம்! அப்படிப்பட்ட பெண்மை நிரம்பிய அந்த நெஞ்சம் தான் விரும்பிய ஓர் ஆணின் உள்ளத்தில் காலூன்றிவிட்டாலோ, அங்கேயே அது நுகர்கின்றது; பசி தணிகின்றது; நிறைவடைகின்றது; அயர்கின்றது; இறுதியில் துறக்கத்தையும் அமைத்துக் கொள்ளுகின்றது.

ஒரு வித்து பூவாக மலர்ந்து, காயாக முதிர்ந்து, கனியாக நிறைவுறுதல்போல், ஒருபெண் பேதையாய் விளங்கிப், பெண்மையாய்ச் சமைந்து, தாய்மையாய் நிறைவடைகின்றாள்! இம் முப்பரு ங்களும் ஒரு பெண்ணின் மூன்று வாழ்க்கைகள். இம்மூன்று தூலக நிலைகளிலும் அவள் உளத்தாலும், உருவத்தாலும் ஒவ் என்செ உயர்ந்து விளங்குகின்றாள். முதல் பருவத்தில் அவ

ளுக்கு அவளே விளங்காதவள்; இரண்டாம் பருவத்தில் அவளுக்குப் பிறர் விளங்காதவர்; மூன்றும் பருவத்தில், பிறர்க்கு அவள் விளங்காதவள்! இம்மூன்று பருவங்களும் பெண்மை என்ற பொன்னிழையில் கோத்த மூன்று முத்துகள்! இவை ஒவ்வொன்றும் தனித்தனி அழகு வாய்ந்தவை; உறுதி நிறைந்தவை. இவை எந்த ஓர் ஆணினுலும் விலை மதிப்பிட முடியாதவை. கற்பனைக் கண்களால் கலைச்சிறகமைத்து அவற்றை நாம் காண முடிந்தால், ஆ! அவற்றின் பொலிவும் வலிவும் தாம் என்னே!

ஐயை ஒரு பாவியம் மட்டும் அன்று; பேதைப் பெண் ஒருத்தியின் உள்ள ஓவியம்! அதில் அருவியின் சிலிர் சிலிர்ப்பையும் பார்க்கலாம்; தென்றலின் குளிர்மையையும் நுகரலாம்; எரிமலையின் சீற்றத்தையும் காணலாம்!

என் இரண்டுமாதச் சிறை வாழ்க்கையின் ஊடே மலர்ந்து மணம் பரப்பியவள் இந்த ஐயை! எங்கேனும் ஐயையைப்போன்ற பெண் ஒருத்தியை நீங்கள் காண நேர்ந்தால் அவள் உள்ளத்தை வாழ்வெல்லாம் தொழுது போற்றிக் கொண்டிருங்கள். அந்தப் பெண்மை உள்ளத்திற்கு இந்த வானமும் எளியது; புடவியும் சிறியது! எங்கோ மலர்ந்து எவர் கண்களுக்கும் படாமல் மணம் பரப்பிக் கொண்டிருக்கும் அத்தகைய உள்ளங்களால் தான் இவ்வுலகம் தன் நிலை பிறழாது சுழன்று கொண்டுள்ளது. ஐயையை முழுவதும் உணர்ந்தால் நீங்களும் அவ்வாறுதான் கருதுவீர்கள்! அதன்பின் உங்கள் உள்ளத்தில் ஒரு புதிய ஒளி பிறக்கும்; ஒரு புதிய வழி விளங்கும். அவ்வொளியும் வழியும் உங்கள் வாழ்க்கைப் பயணத்திற்கு ஓர் அமைதியையும், தெளிவையும் தருமாளுல் அதுவே ஐயையை நான் கண்டு காட்டியதற்குப் பயனும் பரிசும் ஆகும். மேலோட்டமும் ஆரவாரமும் நிறைந்த இக்கால வாழ்வின் பிடிப்புகளிலிருந்து, சற்றே உங்கட்குத் தொலைவான, ஆழமான ஓர் உண்மை உள்ளத்தின் நெளிவு சுழிவுகளைக் காட்டியிருக்கின்றேன். அவற்றைக் கண்டு, காய்ந்து கிடக்கும் மனத்தின் போலிச் சருகுகளை உதிர்த்து விடுங்கள்! அவை ஒன்றுக்கும் உதவாதவை; உங்கட்கும் சுமையானவை! ஐயை அத்துறையில் எல்லார்க்கும் - குறிப்பாக பெண்கள் எல்லார்க்கும் வழிகாட்டியாக விளங்கட்டும்!

(... பார்க்க.)

# ஐயை !

## (1)

அவளே ஐய்யை !
ஒளியுமிழ் அகல்விழி; நுனிகூர் மூக்கு !
வளிவார் அலைகுழல்; பிறைதோய் நெற்றி!
செவ்விதழ்! செதுக்கிய சிறுமணித் தாடை!
கவ்விய சங்கின் அமைந்த கழுத்து!
பசிய தேமல் படர்ந்த மேனி!
ஒசிந்த மெல்லிடை! உடலம் பைங்கொடி!
முல்லைச் சிறுபல் முறுவல் காட்டி
உள்ளத் தவனை இருத்தி ஒண்டொடி
குன்றக் குவட்டில் அமர்ந்து, குமிழ்விடும்
ஒன்றிய காதல் ஊர்ந்த நினைவொடு
பைம்புல் ஒன்றினைக் கிள்ளிப் பற்களால்
நொய்படக் கொறித்து நகர்வழி நோக்கி
இருந்தாள்! அவளின் உள்ளத் திருந்தவன்
விருந்து உணர்வுக்கு; நினைவிற்கு வித்தே!

ஐயை நெடுநினை வாழ்வாள்! அவளின்
மெய்தான் அங்கே மிதக்கும்; நெஞ்சம்
நினைவுச் சிறகால் நெடுநகர் பறந்து
புனைவின் நின்ற பொலிவோன் தன்மேல்
மொய்த்துக் கிடக்கும்! இதழ்முறு வலிக்கும்!
கையில் நெடுங்கோல்! கண்களில் மின்னல்!

அண்டையில் மேயும் ஆடுகள்! இடையிடைக்
கொண்டை குலுங்க அவற்றைக் கூட்டுவாள்!
உயர்ந்த நெடுங்கிளை இலைகளை உதிர்ப்பாள்!
அயர்வாள் என்னினும் உள்ளம் அயராள்!
ஆட்டுக் கூட்டமோ அவளுணர் வறியாது
மேட்டில் ஏறும்; பள்ளத் திறங்கும்!
ஓட்டி ஒருபுறம் சேர்ப்பாள் ஒருநொடி!
மீண்டும் நெஞ்சில் அவனுரு மின்னும்!
தூண்டும் அவனிரு தோள்களில் தோய!
என்செய் வாளவ் விளங்கொடி? துடிப்பாள்!

புண்செய் அவன்றன் நினைவையும் புலப்பாள்!
இதற்குள்,
'அம்மே' என்றே அரற்றுமோர் ஆடு !
வேலியைத் தாண்டிக் குதித்திடும் ஒன்று!
பாலைச் சப்பிடத் தவிக்குமோர் குட்டி!
அவற்றிடை ஓடுவாள்! அவைபோற் கத்துவாள்!
தவழுங் குட்டியைத் தாவி அணைப்பாள்!
அவன்றன் நினைவே அண்டும் மீண்டும்!
உவகை நெஞ்சத்து ஊஞ்சல் ஆடும்!
காதலன் கற்கும் கல்வியைக் கடிவாள்
ஓதற் பிரிவை எண்ணி உளைவாள்!
அந்திப் பொழுதோ அதற்குள் பாயும்!
நொந்து வருந்துவாள்! நோய்மிக உறுவாள்!
காலை யிருந்து மாலை வரையிலும்
நூலிடை வருந்த நுதல்நனி வெயர்ப்ப
ஆடுகள் மேய்த்தல் ஐயை வழக்கம்!
தேடும் அவனையே விழிகள்! தேய்வாள்!
இன்றை வருவான் எனுமவள் நெஞ்சம்
அன்றை கடந்தால் அடுத்தநாள் என்னும்!
உச்சிப் பொழுதினில் ஊறுகாய்க் காரம்
இச்சிச் செனும்படி இதழ்எரி வெடுக்க
கலயத் துள்ள கஞ்சியைக் குடிக்கையில்
தலைதென் படுமா எனஆ யிரமுறை
சேல்விழி நோக்குவாள்! சேயோன் வராவிடில்
வேல்விழி கண்ணீர் வடித்து விம்முவாள்!
அவளுடல் தன்னில் அவனுயிர் இருப்பதாய்
உவகை நெஞ்சொடு நினைந்துயிர் வாழ்வாள்!
காதலன் நகரில் கல்வி பயில்வான்!
சாதல் வருமுன் வருதலை வேண்டி
ஆயிரம் தெய்வம் அகத்தில் வழுத்துவாள்!
ஏயும் அவன்நினை விருப்பதால் இருப்பாள்!
என்றும் அவள்போய் ஏறிப் பார்க்கும்
குன்றின் உச்சியில் கொடுங்கற் பாறையின்
அருகினில் சிறுசிறு கற்களால், ஐயை
வரவுநாள் எண்ணி வாடிக் குலைந்தாள்!
கற்கள் குவிந்தன! காதலன் வராமல்

நிற்காக் கணக்கு நீண்டுகொண் டிருந்தது!
அன்றும் அவனை அவளெதிர் பார்த்தாள் !
நின்று நின்று கால்கள் சோர்ந்தன.
உள்ளத் தவலம் ஓங்கி யிருந்தது!
வெள்ளக் காட்டினுள் விழிகள் முழுகின!
இதழ்கரு கிற்று! நுதல்ஒளி இழந்தது!
பதைக்கும் நெஞ்சொடும் பறக்கும் உயிரொடும்
ஆடுகள் தம்மைக் குடிலுக் கோட்டினுள்!
ஆடுகள் வயிறோ அரைநிறை வயிறு!
வாடித் திரும்பிய ஐயையை
ஓடிவந் தணைத்தாள் முதியோள் ஒருத்தியே!

## (2)

முதியோள், ஐயை தந்தையின் முத்தாள்!
எதிரும் முதுமையில் கணவனை இழந்தவள்!
தம்பியின் மகளொடும் தன்னொரு மகனொடும்
வம்ப மாக்கள் பார்வையில் ஒதுங்கி
ஊர்ப்புற மருங்கில் ஒருதனிக் குடிலில்
சீர்நிலை திரியா வாழ்க்கை செய்தாள் !
மறியும் நிரையும் கணவனின் வைப்பே !
அரைவயி றூற்றி முதியளும் ஐயையும்
ஒருமா மகனை உயர்நகர் தன்னில்
பெருநிலைக் கல்வி பெறுதற் குய்த்தனர் !
பெற்றோர் இழந்த பொற்றொடி ஐயைக்கு
உற்ற உறவெலாம் அத்தை ஒருத்தியே !
மகனுக்கு ஐயையை மணங்கொள நினைத்து
பகலும் இரவும் தெய்வம் பராவி
ஐயையைக் கண்ணென அருமையாய் வளர்த்தாள் !
மெய்குளிப் பிப்பாள்! மேனி தேய்ப்பாள் !
உடையெடுத் துடுப்பாள்! ஈர்ந்தலை உலர்த்துவாள் !
பெடையெகி னம்போல் நடக்கும் பெற்றியை
விழியகற் றுமல் உவந்து வியப்பாள் !
பழிமே வாமல் பாவையைக் காத்தாள் !
மகற்கும் அவட்கும் மணநாட் போதில்
தகுசீர் வழங்கிடத் தனிப்பொருள் சேர்த்தாள் !

விழிப்பினும் உறக்கத்தும் வினைசெய் பொழுதினும்
களிப்பினும் துயரினும் கன்னியும் மகனும்
விழியிலும் நெஞ்சிலும் வீற்றே இருந்தனர்!
மொழியக் கேட்பின் ஐயையின் மொழியே!
கிளியும் குயிலும் கிறக்கம் கொள்ளாள்!
களிமொழி தன்னுரை கள்ளாய் அருந்தினள்!
இரவில் அவளோ டின்துயில் கொள்வாள்!
கரவு நினையாள்! கனவின் வாழ்ந்தாள்!
ஐயை முகமலர் வாடுவாள் ஆயின்
மெய்நடுக் குறுவாள்! மேனி அணைப்பாள்!
நெற்றி நீவுவாள்; நிலாமுகம் தன்னை
ஒற்றி உவப்பாள்; உகுநீர் துடைப்பாள்!
காலையில் ஆப்பால் கறந்தருந் துவிப்பாள்!
மாலையில் பால்நெய் அடிசில் தருவாள்!
அன்றவள் ஐயை அழகொளிர் முகத்தில்
துன்றும் வருத்தத் தோய்வைக் கண்டாள்!
காரணம் என்னெனக் கனிவாய்க் கேட்டாள்!
"ஊரும் நினைவொரு கோடி; உண்மையில்
அத்தான் ஒருவரே அத்தனை நினைவிலும்
வித்தாம்" என்றாள்! அத்தை வியந்தாள்!
நாணிய முகத்தை முதியவள் நிமிர்த்தி
ஆணிப் பரல்நகை அள்ளிப் பருகினள்!
"அத்தான் வரஇனும் எத்தனை ஆண்டுகள்
செத்துப் பிறப்பேன் அத்தை?" என்றிட
சுருங்கிய விழியால் முதியவள் சிரித்து
நொறுங்கிய ஆடிபோல் திரைமுகம் நொடித்தே
"இன்னே அவன்வரின் என்செய் வாய்?" என
"முன்னரும் நில்லேன்; முகமும் பாரேன்;
உங்கள் முதுகினில் ஒடுங்குவேன்" என்றாள்!
திங்கள் முகத்தின் தீதிலா அன்பை
முதியவள் உளத்தால் மொண்டு பருகி
"புதிதாய்ச் செய்தி ஒன்று புகல்வேன்;
ஒப்பிய நின்னுளத் துறைவோன் இன்னும்
முப்பது நாட்களில் வருவதாய் முடங்கல்
இன்றே எழுதினன் இதோபார்!" என்றிட
கன்றெனத் துள்ளிக் கைகளாற் பறித்து

நனைவிழி ஒற்றி நடுக்குறப் பிரித்துப்
புனையா ஓவியம் போல்அதைப் படித்தாள்!
கண்களில் முத்தாய்க் கண்ணீர் கழன்றது!
பண்புறு பாவை படிவமா நின்றாள்!

முதியோள் நெருங்கி ஐயையின் முகத்தை
விதிர்ப்புற நீவி, "வீணே வருந்துதல்
அழகிலை அம்மா; அருந்துயர் ஏ"னென
"எழுதும் மடல்கள் எல்லா வற்றிலும்
ஐயை யெனுமோர் அடிமைப் பேதை
இருக்கின் றாளா? இறந்தா ளாவென
ஒருவரி - வேண்டா - ஒரு சொல் லாகிலும்
எழுதா திருந்திட என்பிழை செய்தேன்?
அழுகை ஒன்றே ஆறுதல்!" என்று
விழிநீர் பெருகிட ஐயை உரைத்ததும்
'பழியிலை பெண்ணே! விளைவுருப் பையல்!
நாம்படு வருத்தம் நன்கறி வானோ?
ஆம்பல் விழியே அழேல்'என் றடக்கி,
ஆநிரை கறந்து கொட்டில் அடைத்துத்
தூநிறை விளக்கம் துலங்க ஏற்றி
நொய்க்கொழுஞ் சோற்றில் நெய்விட் டளவி
ஐயைக் கிட்டுத் தானும் அருந்தி
முன்றிலிற் காய்ந்த முழுநிலா வொளியில்
அன்றிலை அமர்த்தி 'ஐயை! உன்அத்தான்
எழுதிய முடங்கல் எனக்கே ஆதலின்
கொழுங்கொடி நின்னைக் குறித்திலன் போலும்!
ஒன்றுகாண் உண்மை! உனக்கென எழுதின்
'ஒன்றிய உளமே! உயிரே' என்று
பலபடப் புகழ்ந்து பதைப்புறும் உனக்குச்
சிலபல எழுதிச் சிரித்திட வைப்பான்!
இனிவரின் உனக்கே எழுதிடச் சொல்வேன்!
தனிநான் இனி"யெனத் தகவுற மொழிந்தாள்!
இளம்பூங் கையால் இவள்வாய் பொத்தி
'உளத்தின் தெய்வமே உரையேல் அவ்வுரை;
என்பிழை பொறுப்பீர்' என்றுரை சாற்றி
புன்கணீர் கடைவிழி புலர்ந்திட அத்தையின்

# அருந்தமிழும் அயல்நாட்டறிஞரும்

-- புலவர். திருமேனி நாகராசன், காரைக்கால்.

தமிழின் பெருமையும் தொன்மையும் வன்மையும் எண்ணின் இய லாதாம்; சொல்லின் மாளாதாம்; எழுதின் முடியாதாம். தமிழ்த் திறத்தை அளவிடலென்பது, படிகொண்டு கடல் நீரை முகத்தல் போலவும் கோல்கொண்டுலகை அளத்தல் போலவும் கைக்கொண்டு வானைத் துழாவல் போலவும் ஆமென்க. அத்துணை உயர்வுடைத்தோ தமிழெனில், அதில் ஐயம் இல்லை யென்றுணர்க. தலைக்கழகத்துத் தலைமைப் புலவன் முதலாக, இக்கால இணையில் புலவன் பாரதிதாசன் ஈறுகத் தமிழைச் செயல் மறந்து, அதன் திறம் வியந்து பாராட்டாத புலவனில்லையே.

இத்துணைச் சிறப்பமைந்த நந்தமிழைக் கையிகந்து இக்காலத் தமிழிளைஞர் அயன் மொழிமேல் அடர்த்தெழு அடங்கா ஆர்வலராய் அதனைக் கெழீஇக் கொள்வாராக, அவர்தம் செயற்கண் டுளம்நைந் தார் உண்மைத் தமிழ் நெஞ்சுடையார். கற்றுணர்ந் தோங்கிய கணக் கில் புலவர் பெருமக்கள் தமிழின் உயர் நிலையை அவர்க்குக் காட்டி "உதுக்காண், நந்தமிழின் உயர்வுடைமையை. தாய் மொழி மறத் தல் உய்தியில் குற்றமன்றே. ஆதலின், அயன் மொழிப் பற்றற்றுத் தமிழைப் பேணித் தலை சிறக்க" வென்பர்.

இனி, இம்மேதகைமை சான்ற மூதறிஞர் கருத்தை ஆங்கில உயர் நிலைப் பட்டமுற்று அகவையில் மூத்து அறிவில் தாழ்ந்த மக்கள் பதடி யோர் சிலர் பகடி செய்யத் தலைப்படுவர். அவரெல்லாரும் பெயரால் தமிழராயினும், பிறப்பால் கலவை இனத்தாரே. அவர் நாக்கடிப்பாக வாய்ப்பறை அறைவதியாதெனில் "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சே; தமிழ்ப் புலவன் தமிழைப் போற்றுவதில் வியப்பின்றே. தமி ழில் என்ன உளது? தமிழை அயலவன் எவன் போற்றுகிறான்" என்பதே.

---

முன்பக்கத் தொடர்ச்சி

உள்ளுயிர் அன்பை எண்ணி உவந்தாள்!
கள்ளவிழ் கோதைக்குக் கதைபல கூறி
உட்குடில் புகுந்தார் உறங்க;
நட்புறு நன்னாள் நினைந்தாள் நங்கையே! 175

(படரும்)

மாக்சு முல்லரென்ற மொழியாய்வுத் துறைப் பேரறிஞர், ''தமிழ் மிகப்பண்பட்ட மொழியே; அது தனக்காக இயைந்த சீரிய இலக்கியச் செல்வங்களை உடையதுமாம்'' என்பார். இராட்லர் வின்சுலோவென் பார் ''தமிழ் மொழி கிரேக்க, இலத்தீன் மொழிகளை வெல்ல வல்லதே யாம்; கிரேக்க மொழியை வெல்வது செய்யுள் அமைப்பிலும், இலத் தீன் மொழியை வெல்வது இலக்கியப் பெருமையிலுமாம்'' என்று அறுதியிடுவார். கெல்லெட்டென்பார், ''எந்நாட்டினரும் பெருமை கொள்ளக்கூடிய இலக்கியம் தமிழிலக்கியம்'' எனவும், சான்மர்டாக் என்பார், ''சிறந்த மொழியாயும் அழகிய இலக்கியங்கள் பொருந்தப் பெற்றதாயும் விளங்குவது தமிழ் மொழியே'' யெனவும் உரைப்பார்.

''ஆற்றல் மிக்கதாகவும் சில சொற்களான் கருத்தைத் தெரி விப்பதாகவும் விளங்குவதில் தமிழ் மொழியை வேறெம் மொழியும் வெல்ல முடியாது; அம்மொழியை விட வேறெம்மொழியும் உளத்தின் தன்மையை எடுத்துக் காட்டுவதில் இயைந்ததாகவும் இல்லை'' என் பார் பெர்சிவலென்னும் மொழிப் பேரறிவாளர். [1] ஒரு நூற்றாண்டின் முன் மொழியாராய்ச்சித்துறையில் ஈடுபட்டுத்தொண்டாற்றிய விட்னே என்னும் அறிஞர் தம் நூலில் தமிழ் மொழியைப் போற்றிக் குறிப்பிட் டுள்ளார். அந்த அறிஞர் தமிழ் அறியாதவர்; ஆயினும் அறிந்தவர் வாயிலாகக் கேட்டுப் போற்றியுள்ளார். தென்னிந்தியாவில் பிறந்த அமெரிக்கர் ஒருவர் - கல்வியுந் திறனும் மிக்க எழுத்தாளர் ஒருவர், எண்ணுதற்கும் பேசுதற்கும் எந்த ஐரோப்பிய மொழியையும் விடத் தமிழ் மொழி சிறந்தது எனத் தம்மிடம் எடுத்துரைத்ததாகக் குறிப்பிட் டுள்ளார்.

இனிச் சில்லாண்டுமுன் தமிழகம் புக்கச் செக்நாட்டு பர். கமில் சுவலபில், தமிழிற் பொழிவாற்றித் தமிழறிஞராயினர்க்கு மெய்ம்மலி உவகை செய்து, தமிழ்ப் பெருமை வையம் முழுதும் பரவவேண்டு மென வெடிப்புறப் பேசினர். இக்காலை, தமிழகம் போந்த உருசிய நாட்டன்பர் செம்பியன் தமிழின் மாட்டுத் தலைமைப் பற்றுடையாரே. உயர்நிலைத் தமிழ்க் கல்வி வேட்டு வந்த அவ்வன்பர் இயற்பெயர் ரூதின் என்பதாம். தம் பெயரைச் செந்தமிழ்ப் பெயராகச் செய்து கொண்ட அவர் செயற்கண்டு, தமிழ்ப்பெயரை விடுத்து அயன்மொழிக் கலவைப் பெயரைச் சூடிக் கொள்ளும் தமிழர் திருந்துவதியாண்டு ?

1. பர். மு. வ. இயற்றிய மொழி வரலாறு நூலில் பக்கம் : 393.

செம்பியனின்

" தமிழகத்தில் யான்சேர்ந் தடையுங் களிப்பு
தரணியெங்குங் காண்ட லரிது "

என்னுங் கூற்றுத் தமிழைப் படியாத் தமிழர்க்கு மாற்றந் தருவதாக.

முடிபாக, பிறநாட்டுப் பேரறிஞர் மதிப்புரை நந்தமிழ்க் கமைந்தமை பற்றி உண்மைத் தமிழர் உயர் பேருவகை உறுவாராக. தம் மொழியைத் தாமே பகடி செய்யும் போலித் தமிழர் தம் புன்மையைக் கைவிட்டுத் தம் மொழிக்கு ஆக்கந்தேடி இம்மையும் மறுமையும் உய்வு பெறுவாராக.

" இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக் கும்நிலை எய்திவிட்டால்
துன்பங்கள் நீங்கும்; நலம்வரும்; நெஞ்சினில்
தூய்மையுண் டாகிடும்; வீறுவரும்."


## தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள் நாடு | கொழும்பு | வெளி நாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 6 உருபா | 7-25 உருபா | 9 உருபா |
| தனி இதழ் | 50 காசு | 60 காசு | 75 காசு |

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

| | | |
|---|---|---|
| அட்டை நான்காம் பக்கம் | (இரு வண்ணம்) | 100 உருபா |
| ,, ,, | (ஒரு வண்ணம்) | 75 உருபா |
| உள்ளே முழுப்பக்கம் | | 50 உருபா |
| ,, அரைப்பக்கம் | | 25 உருபா |

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.


## பாவேந்தர் நினைவு மலர்!

அடுத்த (விடை) மாத இதழ் புரட்சிப் பாவேந்தரின் நினைவிதழாக வெளிவரும். பாவேந்தரைப் பற்றிய கருத்து மணிகளையும் அவர்தம் வீறுார்ந்த வாழ்வின் சீரிய நிகழ்ச்சிகளையும், அன்பர்கள் சுருக்கமாய் எழுதிவிடுக்க வேண்டுகின்றோம்.

- ஆசிரியர்.

அவர் நினைவாக



# அடிமை நிலை கரும்பா?

-- பாவேந்தர் பாரதிதாசன் --

பாம்பாகச் சீறும் வடவரின் பல்லை உடைத்தலின்றி
மேம்பாடு கோரி வெறும்பாடு பட்டுக் கிடப்பதுண்டோ?
நாம்பாடு பட்டதெல் லாம்விழ லோ? தமிழ் நாட்டுரிமை
வேம்பா? அடிமை நிலை கரும் பா? தமிழ் மேன்மக்களே!

உணலுற்ற சோறும் பறித்தான்! தமிழின் உயர்வழித்தான்!
மணலுற்ற தென்ருன் தமிழகம்! செந்தமிழ் மாணவரே
தணலற்ற வீட்டுக்குள் தைப்பொங்கல் பாடும் தலைவருண்டா?
நுணலா நாம்? தேவாங்கா? ஆமையா சற்றே நுவலுவிரே!

மெய்யேந்தித் தோளினில் வேலேந்தி வாழ்ந்த தமிழரிடம்
கையேந்தி, வேந்தரின் காலேந்தி ஏந்திக் கயல்விழியால்
மையேந்து மாதர் இதழினை மன்னர்கள் உண்ணஏந்திப்
பொய்யேந்தும் ஆரியர் நாட்டின்கோல் ஏந்தவும் போந்தனரே!

முந்தைக்கு முந்தை அதன்முந்தை ஆட்சி முறைவகுத்த
எந்தைக்குத் தந்தை அவன்தந்தை யின்தந்தை பெற்றபுகழ்
கந்தைக்கும் சோற்றுக்கும் இல்லாமை தன்னிற் கரைந்திடில்என்
மைந்தரின் மைந்தர்க்கு வைப்பேன் விடுதலை வாழ்வினையே!

விழிக்குத் தெரிந்த தமிழகம் இல்லையாம் - மேலுமிந்த
மொழிக்குட் சிறந்த தமிழ்முதல் இல்லையாம் முன்னவரின்
வழிக்கென்று யாதும் வரலாறும் இல்லையாம் ஆரியரைப்
பழிக்குப் பழிவாங்கல் அன்னாரின் ஆட்சி பறிப்பதுவே!

தமிழரின் மேன்மை இகழ்ந்த வடக்கர் தறுக்கடக்கி
அமைந்தனர் மூவேந்தர்; அன்றே அவரை அழித்திருந்தால்
இமையம் பிறந்திடு முற்பிறந் திட்டஇன் பத்தமிழைத்
தமது வடமொழி தந்ததென் னார்அச் சழக்கர்களே!

# கண்ணீர் நெஞ்சம்!

துரை. மாணிக்கம்

இறைவா! நின் அருளறஞ்சேர் பேருள் ளத்தை
இயற்கைசெயும் அசைவிலெல்லாம் நெளிவி லெல்லாம்
நிறைவாக அறிகின்றேன்; உணரு கின்றேன்;
நீள்விசும்பு, கதிர், உடுக்கள், புடவி எங்கும்
மறைவான செய்தியில்லை; அறிந்து கொள்ள
மலைப்பூட்டும் உண்மையில்லை; எனினும் ஒன்றைப்
பொறைதீர நினைக்கின்றேன்; விளக்கம் இல்லை;
புவிக்குள்ளே ஏன் என்னை உலவ விட்டாய்?

பொய்மாந்தர் நடுவினிலே மெய்ம்மை பேணிப்
போராடும் நெஞ்சினையேன் எனக்குள் வைத்தாய்?
செய்வினையில் தூய்மையற்றே அறம்பே ணாத
சிறுமையினர் கூட்டத்தில் எனையேன் விட்டாய்?
வெய்யகொடும் நினைவினிலே தீப்போல் காந்தும்
விருப்பு மக்களிடை, சிறுதீங் கிற்கும்
நொய்வுற்றுச் சாத்துயரம் கொள்ளு கின்ற
தூங்காத உள்ளத்தை எனக்கேன் தந்தாய்?

கரடுமுரு டாய் விளர்ந்த கறம்புக் காட்டுள்
கள்ளியெனத் திருகியுளம் முறுக்கம் கொண்ட
திருடரிடை நேர்மை, அறம், உண்மை, வாய்ந்து
தீமைக்கு நடுநடுங்க எனையேன் வைத்தாய்?
குருடரிடை விழிக்க வைத்தாய்; இருளில் விட்டாய்!
கூசுகிலா மக்களின்முன் கூச வைத்தாய்!
அருள்தவிர்ந்த கயவரிடம் அலையச் செய்தாய்?
அமைதியிலா துழலுகின்ற உளமேன் தந்தாய்?

அன்பவிந்த கல்நெஞ்சர்க் கிடையில் அன்பை
அணைகட்டித் தேக்குமொரு நெஞ்சேன் தந்தாய்?
துன்பறிந்தே எனைவிட்டு விலகு வோரின்
தொடர்பெண்ணி வருந்துகின்ற உளமேன் தந்தாய்?

முன்பிருந்து, நட்பாடி, வாய்மை பேணி
முகமலர்ந்தே, உரையாடிச், செயலில் ஒன்றிப்
பின்பிரிந்து, தமைவளர்க்கும் சிறுமை யோர்க்கும்
பிழைநினையா உள்ளத்தை எனக்கேன் தந்தாய்?

தேன்றமிழில் உளங்கிறங்கும் திறமேன் தந்தாய்?
திறமறியா மக்களிடைத் தமிழைப் பாய்ச்சும்
ஆன்றவியா எண்ணத்தை எனக்கேன் ஈந்தாய்?
அவலத்துத் துடிதுடித்(து)ஏன் புரள வைத்தாய்?
கான்றுமிழத் தக்கவரைக் கனிவால் பேணும்
கரவறியா உள்ளத்தை -- துயர்வந் தாலும்
சான்றுண்மை தவிராமல் வாய்மைப் போக்கில்
சலிப்படையாக் கவல் நெஞ்சை எனக்கேன் தந்தாய்?

இருள்மாந்தர் நிரம்பிவழி கின்ற நாட்டில்
இடமறியா துழலுகின்ற மான்போல், நெஞ்ச
அருள்தேடி அலைகின்ற தனி உள் ளத்தில்
அலைகின்ற நினைவுகளை எதற்கென் நீந்தாய்?
பொருள்தேடிக் கயமை செய்து வாழ்வார் பாங்கில்
பொருட்கெனவே நடைநடந்து கண்ணீர் தேங்கும்
திருவுளத்தை -- விளக்கவிலா மாட்சி தன்னைத் --
தீதறியா வல்லுணர்வை எனக்கேன் தந்தாய்?

முத்தரிக்கும் பெருஞ்செயலை எனக்குத் தந்தாய்!
முங்கிவரும் துயரலைக்குள் மூழ்கு வித்தாய்;
தத்தளிக்கும் உணர்வோடும் உயிர்ப்பி னோடும்
தவிக்குமெனக் கிடர்களையே துணைக்கு வைத்தாய்!
பித்தருக்கும் தீயருக்கும் பிழைசெய் வோர்க்கும்
பீடிழந்த பேடியர்க்கும் வினையால், சொல்லால்
கத்தரிக்கும் நெஞ்சினர்க்கும் இடையில் நின்று
கைசலிக்கும் உள்ளத்தை எனக்கேன் தந்தாய்?

குலைக்கின்ற தெருநாய்க்கும், மலந்தின் கின்ற
கூர்முகத்துப் பன்றிக்கும், சேற்றில் தோய்ந்தே
அலைக்கின்ற எருமைக்கும் கழுதை கட்கும்
அருவருப்புக் கொள்ளாமல் இருக்கும் உள்ளம்!

மலைக்கின்ற பெருந்துயர்க்கும் மலைந்த தில்லை.
மண்புனல்தீ வளிவிசும்பும் அஞ்சா(து); ஆனால்
உலைக்கின்ற தீயர்க்கும் கரவி னார்க்கும்
உள்நடுங்கும் நெஞ்சத்தை எனக்கேன் தந்தாய் ?

தேறுமுறை அறியாமல் வழிகா ணாமல்
திசையெட்டும் தேடியலைந் துயிர்வ ருந்தி
ஏறுமுறை காணாமல் இளைப்பா றாமல்
ஏச்சினுக்கும் பேச்சினுக்கும் குலைந்தி டாமல்
வீறுகுறை யாமல்உளம் நிலைநிற் கின்றேன்;
வினைகளுக்கும் போக்குக்கும் இணைவார் தம்மை
நூறுமுறை நம்பிவிட்டேன்; நம்பு கின்றேன்;
நோகார்க்கு நோகின்ற நெஞ்சேன் தந்தாய் ?

யாமாற்றும் பணிகளுக்கும் பொதுத்தொண் டிற்கும்
யாம்யாமென் றிணைந்துவந்து துணைநிற் பார்போல்--
தாமாற்றும் வினைகளிலே தூய்மை காட்டித்
தாங்கிடுவார் போல் இருந்தே முடிவில் என்னை
ஏமாற்றும் திறன்மிகுந்தார் கரவை முன்பே
எடைபோட்டுப் பார்க்கின்ற திறன்தா ராமல்
நீமாற்றும் காட்சிகளின் அசைவிற் கெல்லாம்
நிலைகலங்கும் நெஞ்சத்தை எனக்கேன் தந்தாய்?

---

## தென்மொழியின் மூன்றாந் தொகுப்பு.

தென்மொழி மூன்றாஞ் சுவடியின் 12 ஓலைகளும் முழுமையாகக் கிடைக்கப் பெறாத அன்பர்கள் கவலுற வேண்டா. 12 ஓலைகளையும் இணைத்து அழகிய கட்டடமாக்கியுள்ளோம்.

பதிவஞ்சல் செலவு உட்பட உருபா பன்னிரண்டு முன்பணமாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தென்மொழியின் இரண்டாந் தொகுப்பும் உருபா பன்னிரண்டுக்குக் கிடைக்கப் பெறும்.

இன்றே எழுதுக !

அமைச்சர்
**தென்மொழி.**

# அழகு

பாவேந்தர்-பாரதிதாசன்

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன் ;
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன் ; அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்,
தொட்ட இடம் எலாம் கண்ணில் தட்டுப் பட்டாள்.
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ; ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டம்
தனில் அந்த அழகென்பாள் பாக்கள் தந்தாள்.

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்ருள் ;
திருவிளக்கில் சிரிக்கின்ருள் ; நாரெ டுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்
நாடகத்தைச் செய்கின்ருள் ; அடடே! செந்தோட்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள் ; விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தி ஞள் ; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்.

திசைகண்டேன் வான்கண்டேன் ; உட்பு றத்துச்
செறிந்தனவாம் பலப்பலவும் கண்டேன் ; மற்றும்
அசைவனவும் நின்றனவும் கண்டேன் ; யாண்டும்
அழகுதனைக் கண்டேன் ; நல் இன்பம் கொண்டேன்
பசையுள்ள பொருளிலெலாம் பசையவள் காண் !
பழமையினுல் சாகாத இளையவள் காண் !
நசையோடு நோக்கடா. எங்கும் உள்ளாள் ;
நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை.

BARATHIDHASAN

I saw her in the radiant rising sun;
And in the glimm'ring waters of the sea;
In tender leaves, and flowers, in groves and glen.
Wherever I turn, she smiles with sparkling glee.
There she gleams in the evening sun that glows
Ruby - like in refulgence flowing free.
In banyan trees, in parrots on their boughs,
Sweet Beauty's pouring forth her poetry!

She's the light in the infant's lustrous eyes;
And the laughs from the lantern's luminous gleam
From on the flower-girl's fingers deft and quick
She weaves a drama of enchanted dream.
In th' proud gait of the ploughman gay she beams;
Hangs on the ripe-corn fields, the ears so coy,
Displaying golden hues arrests mine eyes;
And enters me and fills my soul with joy.

I saw the vault of heaven, the things within,
Mine eyes in all directions I did send;
Saw things that move, and the immobile things
Oh joy, in everything did Beauty blend!
The pulk and narrow she's of all the things
With erning not with time, she's young for eye;
With Zest you look, you'll meet her everywhere
And at good Beauty's touch your sorrows fly.

ஆங்கில ஆக்கம்: ம. இலெ. தங்கப்பா.

வாழ்க்கை வரலாறு

# சார்சு வாசிங்டன் கார்வர்

" வழுதி."

"உமக்குப் பொருளோ, பதவியோ, புகழோ அளிப்பதற்கு என்னுல் இயலாது. முதலிரண்டும் ஏற்கனவே உம்மிடத்தில் உள்ளன. புகழோ விரைவில் உமக்குக் கிட்டவிருக்கின்றது. இவையனைத்தையும் நீர் துறக்க வேண்டும் என்றுதான் நான் உம்மை வேண்டிக்கொள்கின்றேன். அவற்றுக்கு மாருக ஒரு வேலையை - மிகமிகக் கடுமையான வேலையை - உமக்களிக்க முன்வருகின்றேன். ஓரின மக்களை இழிவினின்றும் வறுமையினின்றும் அழிவினின்றும் கைகொடுத்துத் தூக்கி அவர்களை மாந்தராக வாழச் செய்யும் பெரும் பொறுப்பு - தொண்டு - அது. அதனை ஏற்றுக்கொள்ள விரும்புகிறீரா ? "

இதுபோலும் ஒரு மடல் நம் தமிழகத்தில் ஒரு கல்லூரிப் பேராசிரியருக்கோ' ஆராய்ச்சியாளருக்கோ கிடைத்திருக்குமாயின் அதற்கு என்ன விடை புறப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கின்றீர்கள்? " அட சரிதான்; எழுதிவிட்டார் பெரிதாக! கடுமையான வேலை செய்ய வேண்டியதுதான். அதற்காக, இருக்கும் ஏந்துகள் எல்லாவற்றையும் கெடுத்துக் கொள்வதா? அப்படிச் செய்தால்தான் தொண்டாகுமா ? நாம் இப்பொழுது செய்வது தொண்டாகாதா ? தானே தொல்லையும் துயரும் பட்டுக்கொண்டு ஒருவன் மற்றவர்க்கு என்னதான் செய்து விட முடியும் ? ஏதோ நம்மால் முடிந்த அளவுதான் தொண்டு செய்யலாம். அதற்குமேல் எதிர்பார்ப்பது தவறு". என்று எடுத்த எடுப்பிலேயே கூறிவிட்டு மடலைக் கிழித்து நெருப்பில் போட்டிருப்பார்கள். அதிலும், மிக வறிய நிலையினின்று படிப்படியாக உயர்ந்து ஏந்தான இடத்தைப் பற்றிக் கொண்டிருப்பவர்களைப் பற்றிப் பேச வேண்டியதே இல்லை. ஆனுல், அடிமையாகப் பிறந்து, மிக இளமையிலேயே தந்தையை இழந்து, தாயிடமிருந்து பிரிக்கப் பெற்று, நோயிலும் வறுமையிலும் வாடி உழன்று தனக்கென உலகில் எந்த நிலையும் இல்லாமல் அன்றன்று கூலி வேலை செய்வதன் மூலமாகவே வயிற்றைக் கழுவி, அந்தக் கூலி வேலையை நம்பியே பள்ளியில் சேர முயன்று, நிறவெறி பிடித்த வெள்ளையரின் எதிர்ப்புக்கும் தடைகட்கும் எள்ளலுக்கும் ஆளாகியும் தளராமல் கடிய உழைப்பாலும் இடையரு முயற்சியாலும் கல்லூரிப் படிப்பை முடித்து இறுதியாகத் தம்

போன்ருர்க்குக் கிடைத்தற்கரிய கல்லூரி ஆசிரியர் பதவியை அப்பொழுதுதான் எட்டிப்பிடித்திருக்கும் நீகிரோ மாந்தர் ஒருவர் - நெடுநாள் துன்பத்துக்கு மருந்தாக அப்பொழுதுதான் நல்ல நண்பர்களேயும் அமைதியையும் மகிழ்வையும் பெற்றிருப்பவர் - தம் ஆய்வு வன்மையால் புகழையும் வருவாயையும் பெறத் தொடங்கியிருப்பவர், - தம் இனத்தலைவர் ஒருவர் எழுதிய இம்மடலைக் கண்டு தம் பதவியைத் துறந்து ஊதியம் குறைந்த கடின உழைப்பை ஏற்றுக்கொள்ள முன் வந்தார் என்ருல் அவரின் தொண்டுள்ளத்தை என்னென்று புகழ்வது! அதுமட்டுமா? பிற்காலத்தில் தம் சொந்த அறிவாற்றலைக்கொண்டு கோடி கோடியாகப் பொருளீட்டும் பெருவாய்ப்புக் கிடைத்த பொழுது பணத்தைத் துளியும் மதியாமல் தொண்டையே பெரிதென்று கருதி அவ்வாய்ப்புகளைத் தூசென்று மறுத்து ஒதுக்கினுர், இப்பெரியார்.

குமுகாயத்தின் மிகத் தாழ்ந்த படிநிலையினின்று இடையரு உழைப்பாலும் குன்ருஉறுதியாலும் படிப்படியாக முன்னேறி மிகமிக உயர்நிலையினை எட்டிப் பிடித்த பேருழைப்பாளர் இவர். வறுமையிலும் அறியாமையிலும் உழன்று மேலும் மேலும் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருந்த நீகிரோஇன மக்களுக்கு அறிவையும் தன்னம்பிக்கையையும் புது வலிவையும் ஊட்டி அவர்களைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்த குமுகாயச் சீர்திருத்தவாணர் இவர். இயற்கையின் மறை பொருள்களை அகழ்ந்து காட்டி உலகின் ஆய்வுக் கண்களைத் திறந்து வைத்த பேரறிஞர் இவர். இயற்கைக்கும் மாந்தனுக்கும் இருக்க வேண்டிய நெருக்கத்தைத் - தாய் சேய் உறவுமுறையை நன்குணர்ந்து அதனுல் ஏற்படும் பெரும்பயனைப் போலி நாகரிகத்தில் உழலும் உலகத்துக்கு எடுத்துக் காட்டிய மெய்யுணர்வாளர் இவர். தம் அரிய ஆராய்ச்சியால் வேளாண்மைத் துறையின் குறைபாடுகள் பலவற்றைக் களைந்து, நிலத்தினை உலகுக்கே பெருமருத்துவராகத் திகழ்ந்து மாந்தரின் உணவு முறையிலும் வேளாண்முறையிலும் பெரும் புரட்சி செய்த புரட்சியாளர் இவர். வழக்கமாக ஏதாவதொன்றுக்கு மட்டும் பயன்பட்டபொருள்கட்கெல்லாம் பலநூறு பயன்களைக் கண்டுகூறினுர். பயனற்றவை, வீணுகப் போனவை என்று எறிந்துவிட்ட பொருள்கள் கூட உண்மையிற் பயனற்றவை அல்ல என்ற கொள்கையைத் தற்கால அறிவியல் உலகில் முதன்முதல் நிலை நாட்டித் தம் இடையருமுளை உழைப்பால் அவற்றுக்கெல்லாம் ஆயிரக்கணக்கான பயன்கள் கண்டு பிடித்துப் பல புதிய தொழில்களையும், செயற்கைப் பொருள்களையும் (Synthetic articles); உருவாக்கிய பெருந்தொழிற் புரட்சி

யாளரும் இவரே! தம் புத்தாக்கங்களுள் ஒன்றை மட்டுமே விற்றுலும் கோடி கோடியாகப் பொருள் திரட்டும் வாய்ப்பினைப் பெற்றிருந்தும் அதனைப் பயன்படுத்தாமல் கேட்டவர்க்கெல்லாம் தம் ஆய்வின் பயனை இலவசமாக அள்ளி வழங்கிய அருளாளரும் இவரே. அறிஞருள் அறி ஞரும் தொண்டருள் தொண்டருமாகிய இப்பெரியார்தாம் வட அமெரிக் காவில் நீகிரோ இனத்தில் தோன்றிய **சார்சு வாசிங்டன் கார்வர் (George Washington Carver)** என்பவர். "தமிழ் வாழ்க!" "தமிழர் வாழ்க!" என்று மேடையிலோ, அல்லது நாடக மேடை யிலோ இரண்டு சொற்கள் கூறி இறங்கிவிட்டால், - ஓரிதழிலே தமி ழைப் பற்றி ஒரு கட்டுரை-அஃது எப்படியிருந்தாலும் சரி - எழுதிவிட் டால் அந்த அளவிலேயே தம்மைத் "தமிழ்த் தொண்டர்" என்று கரு திக்கொண்டும், அவ்விளம்பரத்தின் வாயிலாய்த் தமக்கென ஆயிரக் கணக்கில் பொருள் ஈட்டிக்கொண்டும் வாழும் நம் தமிழர் தலைவர் களும், அவரையே தொண்டர் என நம்பியிருக்கும் தமிழ் இளைஞர் களும், இன்னும், நகத்தில் அழுக்குப் படாமலும், ஆடை மடிப்புக்கலை யாமலும், சிறிதுகூட உழைக்காமலேயே உயர்வு எய்திவிட நினைக் கும் எல்லாரும், துளியேனும் தன்னலமாசு படியாத பேருழைப்பாள ரான இப்பெரியாரின் துன்பம் நிறைந்த ஆனுல் தூய, அழகிய வாழ்க்கை வரலாற்றைப் படித்துப் பார்த்து நெஞ்சில் நிறுத்த வேண்டு கின்ருேம்.

கொள்ளைக்காரர்கள் எறிந்துவிட்டுச் சென்ற குழந்தை அது. அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நிகழ்ந்த காலத்தில் இக்கொள்ளைக் காரர்கள் உலவினர். பொருள்களோடு, வீடுகளில் உள்ள அடிமை களையும் கொள்ளையடித்துச் சென்று மிகுந்தவிலை கிடைக்குமிடங்களில் விற்றுவிடுவது இவர்கள் தொழில். மிசௌரி மாநிலத்தில் வாழ்ந்த மோசசு கார்வர் என்ற உழவரின் அடிமைப் பணிப் பெண்ணை அவ ளின் குறுமகள் ஒருத்தியோடும் கைக்குழந்தையோடும் அவர்கள் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர். மோசசு கார்வரோ இயல்பாக அடிமை முறையை வெறுப்பவர். தம் பண்ணையில் வேலை செய்யப் பிறரைப்போல் அடிமைகளை வைத்துக்கொள்ள மறுத்தவர். ஆயினும் தள்ளா முதுமையில் தம் மனைவிக்கு உதவியாயிருக்க யாருமில்லா திருக்கவே வேறு வழியின்றி மேரி என்னும் அடிமைப் பெண்ணை அவர் வாங்கவேண்டிய தாயிற்று. ஆயினும் அவளை அடிமைபோல் நடத்தாமல் அவளையும், அவளின் குழந்தைகளையும் தம் குடும்பத்தி னர் போலவே அன்புடன் நடத்தி வந்தார். எனினும் அவர் மனச்

சான்று மட்டும், தாமும் அடிமையை வைத்திருப்பதைக் குத்திக் காட்டிக்கொண்டே யிருந்தது. இந்நிலையில் அப்பெண் கொள்ளைக்காரர் கையில் சிக்கிடவே, கார்வரின் குற்றவுணர்வு பெரிதாயிற்று. அப்பெண்ணைக் குழந்தைகளுடன் மீட்டுக்கொண்டு வந்தாலின்றித் தமக்கு மன அமைதி கிட்டாது என்று உணர்ந்தார். அதற்காகப் பெருஞ் செலவு செய்து ஆளை அனுப்பினர். ஆனால் கைக்குழந்தை மட்டுமே திரும்பக் கிடைத்தது. கொள்ளைக்காரர்கள் மெலிந்து "நோஞ்சா"னாக இருந்த அக்குழந்தையை வேண்டா என்று வழியிலேயே எவரிடமோ விட்டுச் சென்றுவிட்டனராம்! வாடி வதங்கிக் குற்றுயிரும் குலை உயிருமாய் வந்து சேர்ந்தது அவ் வாண்மகவு. எப்பாடு பட்டேனும் அதனைக் காப்பாற்றி விடுவது என்று மோசசும் அவர் மனைவி சூசனும் உறுதி பூண்டனர். மிகுந்த அக்கறையோடு அதனைப் பேணிவரலாயினர்.

அக்குழந்தைக்கு சார்சு (George) என்று பெயரிட்டனர். மிக இளமையிலேயே, இருமல், நீர்க்கோவை, இழுப்புப் போன்ற பல நோய்கள் சிறுவனை வாட்டி வதக்கின. குரல் கர கரவென்றாயிற்று. வாய் திக்கு வாய் ஆயிற்று. ஆயினும் மிகுந்த பேணுதலாலும், உள்ளார்ந்த ஏதோ வலிவாலும் சிறுவன் பிழைத்துக் கொண்டான். இச்சிறுவனின் அண்ணனே 'சிம்' (Jim) என்பவன். கொள்ளைக்காரர் பிடிக்கு அகப்படாமல் தப்பித்துக் கொண்டவன். இருவரும் கார்வரின் வீட்டில் வளர்ந்து வந்தனர்.

உள்நாட்டுப் போர் நின்றதும் அடிமைகட்கு விடுதலை வழங்கப் பெற்றது. அப்பொழுது சார்சும், சிம்மும் சிறுவர்களே. கார்வர் அவர்கட்கு விடுதலை வழங்கினர். ஆனால் விடுதலை என்றால் என்ன என்று அன்பில் வளர்ந்த அச்சிறுவர்கட்குப் புரியவில்லை. தொடர்ந்து கார்வர் இல்லத்திலேயே வளர்ந்து வரலாயினர். சிம் நல்ல உடலுறுதியும் வலுவும் உடையவன். கார்வருக்கு வயல் வேலைகளிலும் ஆட்டுப் பண்ணையிலும் உதவியாயிருந்தான். சார்சோ, நோயாளனாக இருந்ததால் வெளி வேலைகட்குச் செல்லவில்லை. கார்வர் அம்மையாருக்கு வீட்டு வேலைகளில் துணை புரிந்து வந்தான். பெருக்குதல், கழுவுதல், தோல் பதனிடுதல் நூல் நூற்றல் போன்ற வேலைகளைச் செய்து வந்தான். கார்வர் அம்மையாரின் பின்னல் வேலைகளைப் பார்த்துக் கொண்டேயிருந்த சார்சு ஒருநாள் வான்கோழி இறகுகளை ஊசியாகப் பயன் படுத்தி ஒரு பழைய கையுறை ஒன்றின்மேல் சில பின்னல்வேலை

களைச் செய்து காட்டினான். விரைவில் கார்வர் அம்மையாரைப் போலவே தைக்கவும் கற்றுக் கொண்டான். அவன் திறமை வியக்கத் தக்கதாயிருந்தது.

சற்றுப் பெரியவனானதும் சார்சு காடுகளில் திரியத் தொடங்கினான். இயற்கையின் வியக்கத்தக்க திறங்கள் அவனை ஆட்கொண்டன. அதன் அழகு அவனுக்கு உயிருவப் பூட்டியது. காட்டின் நடுவில் இயற்கை பூத்துக் குலுங்கிய ஓர் அழகிய இடத்தை சார்சு தனக்கெனக் கமுக்கமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். நாள்தோறும் தனிமையில் அங்குச் சிறிது நேரம் கழித்தான். செடியும் கொடியும் மலரும் புள்ளும் விலங்கும் அவனுக்குப் பெரு மகிழ்வூட்டின. அவற்றின் கூட்டுறவில் அவன் உள்ளம் துள்ளியது. அவற்றின் வாழ்வை அவன் கூர்ந்து நோக்கினான். மரப்பட்டைகளின் இடையில் வாழும் பூச்சிகளையும், ஊரும் புழுக்களையும் பல்லிகளையும், பறந்து திரியும் வண்டுகளையும் தும்பிகளையும் அவன் ஆராய்ந்தான். விரைவில் அவற்றின் வாழ்க்கை பற்றிய பல நுணுக்கச் செய்திகள் அவனுக்குப் புலப்பட்டன. இயற்கையைப் புரிந்துகொள்ள அவன் மனம் துடி துடித்தது. மழை பெய்வது எப்படி? மலர்கள் சில மஞ்சளாகவும் சில சிவப்பாகவும், சில நீலமாகவும் இருப்பது ஏன்? இவை போன்ற வினாக்கள் அவன் மூளையைக் குடைந்தன. மண்ணைக் கையிலே அள்ளி எடுப்பதில் அவன் இன்பங் கண்டான். மண்ணே அவனின் தாய். மலரும் செடியும் கிழங்குகளுமே அவனின் விளையாட்டுப் பொருட்கள்.

கார்வரின் பூந்தோட்டத்தில் சார்சு கருத்தைச் செலுத்தினான். ஒவ்வொருநாளும் மலர்களோடு மறைபொருள் பேசும் அவனுக்கு அவற்றின் உள்ளம் நன்கு புரிந்திருந்தது போலும்! அவன் கைபட்ட செடிகள் தழைத்தோங்கின. தோட்டம் பூத்துக் குலுங்கியது. ஒரு நாள் அண்டைவீட்டு அம்மையார் தம் மலர்ச்செடிகள் பூக்காதிருப்பது பற்றி வருந்திக்கொண்டார். சார்சு சென்று பார்த்தான். அவற்றுக்குப் போதிய வெயில் இல்லை என்று புரிந்து கொண்டான். (நாம் மிக எளிதாக இப்பொழுது புரிந்து கொள்ளும் இச்செய்தி அப்பொழுது இவ்வளவு தெளிவாக எவருக்கும் தெரிந்திருக்கவில்லை.) தொட்டிகளை வெயிலில் எடுத்து வைத்து, மண்ணைக் கிளறி சார்சு அவற்றுக்கு நீர் ஊற்றினான். சிறிது நாட்களில் அச்செடிகள் பூத்துக் குலுங்கின.

அவ்வம்மையாரின் வீட்டில்தான் சார்சு முதன்முதலாக வண்ண ஓவியங்களைக் கண்டான். அழகிய மலர்களையும், காடுகளையும், மாந்த

முகங்களையும் ஓவிய உருவில் கண்ட சார்சு பெருவியப்புற்று நின்முன். அன்று முழுவதும் அவ்வோவியங்களைப் பற்றிய நினைவிலேயே மிதந்தான். தானும் அவ்வாறு வரைய வேண்டும் என்ற ஆர்வம் அவனை உந்தியது. அன்று மாலை சில காட்டுக்கனிகளின் சாற்றைப் பிழிந்தான். விரலை அதனில் தோய்த்துப் பாறையில் வட்டம் ஒன்றை வரைந்தான். அன்றுமுதல் ஒழிந்த வேளையிலெல்லாம் ஓவியம் வரையலானுன். பாறைகளில் தகரத்தால் கீறியும், மண்ணில் விரலால் கிழித்தும் தான்கண்ட செடிகளையும் மலர்களையும் ஆட்களின் முகங்களையும் வரைந்து மகிழ்ந்தான். இதற்கிடையில் அவன் பெயர் சுற்று வட்டார மெங்கும் பரவியது. செடிகளுக்கு வரும் நோய்களை நீக்கி அவற்றை அவன் சரிப்படுத்திவிடுகின்முன் என்பதை அறிந்த பலர் அவனைத் தம் தோட்டங்கட்கு அழைத்துச் சென்றனர். சில இடங்களில் செடிகளில் புழு, பூச்சிகள் நிறைந்திருக்கும். சில தோட்டங்களில் தரை கெட்டியாகிப் போயிருக்கும். சிலவற்றுக்குத் தண்ணீர் போதுமானதாயிராது. ஆங்காங்கு அவ்வக் குறைகளைச் சரிப்படுத்துவான் சார்சு. விரைவில் அவனுக்குச் '**செடி மருத்துவன்**' என்று பெயராயிற்று!

சார்சின் அறிவு வேட்கை அடங்காததாயிருந்தது. கார்வரின் பண்ணைக்குச் சிறிது தொலைவில் ஒரு திண்ணைப் பள்ளி நடந்து வந்ததை சார்சு ஒருநாள் அறிந்தான். அப்பள்ளியில் சேரவேண்டும் என்ற தன் விருப்பத்தைக் கார்வரிடம் தெரிவித்தான். கார்வர்கூறிய செய்தி அவனை அதிர்ச்சியுறச் செய்தது. அப்பள்ளி வெள்ளைப் பிள்ளைகளுக்குத்தானும்! கருப்புப் பிள்ளைகளுக்கு அங்கு இடம் கிடையாதாம்! அதுவரை சார்சு தன் கருப்பு நிறத்தைப்பற்றி நினைத்துப் பார்த்ததே யில்லை. ஏதோ நாம் கருப்பாயிருக்கிறோம்; சிலர் வெள்ளையாயிருக்கின்றனர் என்றுதான் நினைத்திருந்தானே யல்லால் கருப்பர் என்ற சொல்லுக்கு அவன் வேறு எப்பொருளையும் தெரிந்து கொள்ளவில்லை. இப்பொழுதுதான் நிறவேறுபாட்டின் முழுப்பொருளும் ஆழமும் அழுத்தமும் அவனுக்குத் தெரியவந்தன. அவனுல் இந்தப் பேரிடியைத் தாங்க முடியவில்லை. இழிவுணர்ச்சியால் முகம் குன்றினுன். மற்றவர்களைக் காணவே அவனுக்குக் கூச்சமாகவிருந்தது. காட்டில் தன் மறைவிடம் நோக்கி ஓடினுன். தரையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதான்.

இந்நிலை அவனுக்குப் பெருத்த ஏமாற்றமாயிருந்ததெனினும் அவன் ஆர்வம் மட்டும் குன்றவேயில்லை. அவனுக்காக இரக்கமுற்ற

கார்வர் அம்மையார் ஒரு பழைய பொத்தகத்தைத் தேடிக்கண்டு பிடித்து அவனுக்குத் தொடக்கக் கல்வியைக் கற்றுக் கொடுத்தார். சார்சு விரைவில் எழுத்துக் கூட்டவும் தன் பெயரை எழுதவும் கற்றுக் கொண்டான்.

ஒருநாள் அங்கிருந்து எட்டுக்கல் தொலைவிலுள்ள 'நியோ சோ' (Neosho) எனுமூருக்குச் சென்றபொழுது அங்குக் கருநிறப் பிள்ளைகளுக்கெனப் பள்ளி ஒன்றிருப்பதை சார்சு கண்டான். எப்படியும் அதில் சேர்ந்துவிடுவது என முடிவு கட்டினான். "சரி, உன்னை அனுப்பி விடுகிறோம். ஆனால் உணவு உடைக்கு என்ன செய்வாய்?" என்றனர் கார்வர். "எப்படியாவது வேலை செய்து பார்த்துக்கொள்வேன்; சமைப்பேன்; குப்பை கூட்டுவேன்; அடுப்பெரிப்பேன் " என்றான் சார்சு. அவன் உறுதி மாற்றமுடியாததாயிருந்தது. ஒருநாள் காலை சூசன் (கார்வர் அம்மையார்) செய்து கொடுத்த சில உண்வுப் பண்டங்களுடன், கார்வரும் சூசனும் அண்ணன் சிம்மும் கவலையோடு வழியனுப்ப, சார்சு அவ்வில்லத்தை விட்டு இப்பரந்த உலகத்துக்குள் நுழைந்தான். அப்பொழுது அவனுக்கு அகவை ௧௪ ஆண்டு (௧அ௭௬).

சார்சு நியோசாவுக்கு வந்தபொழுது பள்ளி மூடியிருந்தது. வேலியோரம் ஒரு மரக்கட்டை மேல் ஏறியமர்ந்துகொண்டு பள்ளி எப்பொழுது திறக்குமோ என்று காத்துக் கொண்டிருந்தான் சிறுவன். அவன் முகம் வாடியிருந்தது. மிகவும் களைத்துக் காணப்பட்டான். உணவுண்டு நெடுநேரமாகியிருந்தது. அப்பொழுது தற்செயலாக அங்குவந்த மரியா வாட்கின் என்ற நீகிரோ பெண் அவனைக்கண்டார். அவன் நிலை கண்டு இரங்கி அவனுக்குச் சிறிது உணவளித்தார். அவன் வந்த காரணத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்ட அப்பெண் அவன் ஆர்வத்தைப் பாராட்டித் தம் வீட்டிலேயே அவனை வைத்துக் கொண்டார். மகப்பேறில்லா அவ்வம்மை அவனைப் பார்த்தவுடனேயே இறைவன்தான் அவனைத் தம்மிடம் அனுப்பியிருப்பதாக உணர்ந்தாராம்!

அதுவரை சிறுவன் "கார்வர் வீட்டு சார்சு" என்றுதான் அழைக்கப்பட்டு வந்தான். முதல் நாள் பள்ளி செல்லுகையில் மரியா அவனை அழைத்து "இனி உன் பெயரை சார்சு கார்வர் என்று வைத்துக் கொள். ஏதோ உயிரில்லாத பொருளைப் போலவா "கார்வர் வீட்டு சார்சு" என்று உன்னையே நீ கூறிக்கொள்ளுவது ?" என்று கூறியனுப்பினார்.

பழைய, பாதி இடிந்த சிறியதோர் அறையில்தான் பள்ளி நடந்தது. ௬௦ நீகிரோச் சிறுவர் அங்குப் பயின்றனர். இடம் மிகச்சிறிது. வெயில் காலத்தில் அறைக்குள் புழுக்கம் மிகுந்து மூச்சுத் திணறும். குளிர்காலத்திலோ உடம்பை ஊடுருவும் குளிர். பகல் முழுவதும் கூடக் குளிருடை அணிந்தாக வேண்டும். சார்சுக்குக் குளிருடை ஏது? அவன் எதனையும் பொருட்படுத்தவில்லை. கருமமே கண்ணுயினுன். பாடங்களை மிகக் கவனமுடன் படித்து வந்தான். ஓய்வு நேரத்தில் வீட்டில் மரியாவுக்கு உதவியாகத் தட்டுக் கழுவுவான். துணிகளைத் துவைத்துத் தேய்த்து மடிப்பான். பெருக்குவான். சமைப்பான். என்ன வேலை செய்தாலும் பொத்தகம் மட்டும் கண்முன் ஓரிடத்தில் விரித்து வைக்கப் பெற்றிருக்கும். வேலை செய்யும் பொழுதே அதனையும் படித்துக் கொள்ளுவான்.

குளிர்காலத்தில் சார்சு மூன்று முறை நோய்வாய்ப் பட்டான். குச்சிபோல் மெலிந்த உடல் குளிரைத் தாங்க முடியவில்லை. பள்ளிக்குச் செல்ல முடியவில்லையே என்ற ஏக்கமும் வருத்தமும் படுக்கையிலிருக்கும் அவனை வாட்டி வதக்கும். அவன் மனத்தை வேறொன்றில் திருப்புவதற்காக மரியா, தாம் அடிமைப்பட்டிருந்த நாட்களின் பழங்கதைகளை சார்சுக்குக் கூறுவார். அடிமைகள் எழுதப் படிக்கத் தெரிந்தவராய் இருந்தால் வெள்ளையர்கள் அவர்களை ஐயத்தோடு நோக்குவாராம் எங்கே கலகம் விளைவிக்கப் போகிறார்களோ என்று. அப்படிப்பட்டவரை வைத்துக் கொள்ளுவதை விடக் கண்காணு இடத்தில் கொண்டுபோய் விற்று விடுவார்களாம். இதனாலேயே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களும் அதைக் காட்டிக்கொள்ள மாட்டார்களாம். தங்களோடிருப்பவர்கட்கு எழுத்துச் சொல்லிக் கொடுப்பதென்றாலும் மிகவும் அச்சத்தோடும் கமுக்கத்தோடும் தான் செய்யவேண்டுமாம். இவ்வாறு நீகிரோ இனமே அறியாமை இருளில் அழுந்திக் கிடக்கின்றதாம். "அதனால்தான் தம்பி, நான் உனக்குக் கூறுகிறேன். நீ படித்தால் மட்டும் போதாது. நீ படித்து வெளியேறி நம்மவர்க்கெல்லாம் படிப்பைக் கற்றுக் கொடு. உன் அறிவை அவர்கட்கு வாரி வழங்கு" என்று அந்த அம்மை அடிக்கடி கூறுவார்.

- தொடரும்.

---

## உறுப்பினர்கள் கவனிக்க!

மடல் எழுதும் பொழுதும், பணம் விடுக்கும் பொழுதும் உறுப்பினர்கள் தங்களின் உறுப்பினர் எண்களைத் தவருது குறிப்பிட வேண்டுகின்ரேம்.

- அமைச்சர்.

# தூள் தூளாகும்!

[மணிவேலன்]

வான் பொழியும் மழையன்ன வழிந்துவரும்
சொற்பெருக்கால் வளர்ந்தெழுந்து
தேன்பொழியும் இனிமையுடன் பொருள்வளமும்
கொண்டதமிழ் தெவிட்டல் உண்டோ?
ஏன்பழியைச் சுமக்கின்றீர்? கல்லூரி
மொழியாக்க ஏன் தயக்கம்?
கூன் கழுதைச் சுமை போன்றே ஆங்கிலத்தில்
பட்டங்கொள் கொழுப்போ சொல்வீர்?

பஞ்சணையில் மனையாளைக் கொஞ்சுகின்ற
தேன்மொழியைப் பால்மணக்கும்
பிஞ்சான வாயாலே சுவைமணக்கச்
செவிமணக்கப் பிளிற்றும் தேனை
அஞ்சாது 'தகுதியிலை' எனச்சொல்லி
ஆங்கிலத்தை அணைத்துக் கொண்டே
இஞ்சிதின்ற குரங்காக இளிக்கின்ற
அறிவிலிகாள்! ஏனோ கீழ்மை?

செல்லரித்த அறிவுடையார் தன்மானம்
தமிழ்ப்பண்பு சிறிது மில்லார்,
"கல்லூரிப் பாடங்கள் நம் தமிழில்
பயிற்றுவித்தால் கலைகள் எல்லாம்
நல்லபடி வளர்வதற்குத் தோதில்லை';
நையு" மென நாளும் பேசி
மல்லாந்து படுத்தபடி எச்சிலினைத்
துப்புகின்றார்; மதியற்றாரே!

"முடியாது தமிழாலே!,' எனச்சொல்லித்
தமிழகத்தில் முழக்க வேண்டாம்
விடியாத இரவுண்டோ? விலகாத
பனியுண்டோ? வீணில் நீங்கள்

# வியத்தகு உடல்

அ. பொன்னம்பலம்.

உலகில் நிகழும் வியப்பான நிகழ்ச்சிகளைச் சிலபொழுது கேட்டோ கண்டோ, நம்மை மறந்து வியக்கின்ருேம்; ஆனால் எல்லா வகையான வியப்பான நிகழ்ச்சிகளையும் தோற்கடிக்கும் வண்ணம் நம் உடல் பெற்றிருக்கும் ஆற்றல்களைப்பற்றி அறிந்துகொள்ள நம்மில் பெரும் பான்மையோர் விரும்புவதில்லை. நம்முடைய உடல் பெற்றிருக்கும் வியத்தகு ஆற்றல்களைப் பற்றி மருத்துவர்கள் அளித்திருக்கும் சுவையான புள்ளி விளக்கங்களை இக்கட்டுரையில் காணுவோம்.

உயிரணுக்கள்:-

பெரிய கட்டிடம் ஒன்று எவ்வாறு பல ஆயிரக் கணக்கான செங்கற்களால் உருவாக்கப் பெற்றுள்ளதோ அதுபோன்றே நம்முடைய உடலும் பல கோடிக்கணக்கான உயிரணுக்களால் ஆக்கப்பட்டுள்ளது. மாந்தன், உடலின் ஏறத்தாழ 26,500,000,000,000 உயிரணுக்கள் உள்ளனவெனக் கணக்கிடப் பெற்றுள்ளது. இந்த எண்ணிக்கை உள்ள உயிரணுக்களை ஒன்றன்பின் ஒன்ருக அடுக்கி வைத்தால் ஏறத்தாழ 400,000 கற்கள் வரை நீளும் எனக் கண்டுள்ளனர்; இவற்றை

---

முன் பக்கத் தொடர்ச்சி

அடியாளாய் இருந்துகொண்டு தமிழுக்குத்
திரையிட்டே அல்லல் செய்தால்
நொடிப்பொழுதில் தமிழிளைஞர் அதைக் கிழித்துத்
தமிழுக்கு நோன்பு காண்பர்!

கொட்டாவி விட்டபடி தமிழ் மக்கள்
மூலையிலே குந்திக் கொண்டு
வட்டிலிடும் சோற்றுக்குக் கிடக்கின்ருர்,
என்றெண்ணி மயங்க வேண்டா!
கட்டுடலை நிமிர்ந்தெழுந்து களித்தமிழில்
குளித்தெழுந்து கையில் வாளை
தொட்டெடுத்து விட்டாலே தூண்போன்ற
பகையெனினும் தூள்தூ ளாமே!

ஒன்றன்பின் ஒன்ருக நிலத்திலிருந்து நிலவை நோக்கி அடுக்கிக் கொண்டே சென்ருல் அது வரையிற்சென்று திரும்பி அங்கிருந்து அரைப்பங்குத் தொலைவு எட்டும்வரை அடுக்க முடியுமாம்!

நெஞ்சாங்குலையும் குருதிக் குழல்களும்:

நம் உடலிலுள்ள அரத்தக் குழாய்களின் மொத்த நீளம் 62,000 கற்களாகும்; அஃதாவது இந்த நீளத்தைக்கொண்டு இம்மண்ணுலகை இரண்டரைச் சுற்று சுற்றலாம். 24 மணி நேரத்தில் நம் நெஞ்சாங் குலை 1,03,689 முறை துடிக்கின்றது; இதே நேரத்தில் உங்கள் அரத்தமானது அரத்தக் குழல்களில் 168 கற்கள் பயணம் செய்கிறது. உங்கள் தாமரைக்காய் ஓர் ஆண்டில் 370 இலக்கம் முறை சுருங்கி விரிவடைகிறது. 70 ஆண்டுகள் உயிர் வாழ்ந்த ஒருவனின் தாமரைக் காய் ஏறத்தாழ 2,00, 000 'டன்' நிறையுள்ள அரத்தத்தை உடலின் பல பாகங்களுக்கும் அனுப்பியிருக்கும். ஒவ்வொரு முறையும் அது சுருங்கி விரிவடையும் பொழுது, நொடிக்கு ஆறில் ஒருபங்கு ஓய்வு எடுத்துக் கொள்கிறது. 70 ஆண்டுகள் வாழ்ந்த ஒருவனின் நெஞ்சாங் குலை 30 ஆண்டுகள்தாம் வேலை செய்திருக்கும்.

தலை மயிர்:

நம் தலைப்பகுதியிலுள்ள மயிர்ப்பரப்பு ஏறத்தாழ 120 விரற் கடைப் பெருக்கம் (சதுர அங்குலம்) ஆகும். ஒவ்வொரு விரற்கடைப் பெருக்கத்திலும் உள்ள மயிர்களின் எண்ணிக்கை 1000 என்று கணக் கிட்டால், உங்கள் தலைப்பகுதியிலுள்ள மொத்த மயிர்களின் எண் ணிக்கை 1,20,000 ஆகும். ஒவ்வொரு விரற்கடைப் பெருக்கத்திலும் முளைக்கும் மயிர்கள் ஏறத்தாழ 35,000 முதல் 40,000 'இராத்தல்' எடையைத் தாங்கும். இவ்வாறே கணக்கிட்டால் தலைப்பகுதியிலுள்ள எல்லா மயிர்களும் ஏறத்தாழ 5 'டன்' நிறையுள்ள பளுவைத் தாங்கும் திறன் பெற்றுள்ளன. நம் தலையிலுள்ள எல்லா மயிர்களையும் ஒன்று கூட வீணுகாமல் எடுத்துக் கயிறுபோல் திரித்தால் இந்தக் கயி ருனது ஏறத்தாழ 10 'டன்' நிறையுள்ள பளுவைத் தாங்கும்.

முச்சு விடுதல்:

24 மணி நேரத்தில், 25,000 முறை உங்கள் மூச்சை உள் ளிழுத்து வெளியிடுகின்றீர்கள். ஒரு கிழமையில் 1,75,000 முறையும் ஓர் ஆண்டில் 9,125,000 முறையும் நீங்கள் மூச்சு விடுகின்றீர்கள். இவ்வாறே கணக்கிட்டால் 40 அகவையை நெருங்கும் ஒருவன் தன்

வாழ்நாளில் 36 கோடியே, ஐம்பது இலக்கம் முறை தன்னுடைய மூச்சை உள்ளிழுத்து வெளியிடுகிருன். நம் நுரை ஈரலில் சுமார் 60 கோடி காற்றறைகள் (Air - Seas) உள்ளன. இந்தக் காற்றறைகளைச் சதுக்கமாகப் பரப்பினுல் ஏறத்தாழ அரைக்கால் ஏக்கர் பரப்புள்ள இடத்தை அடைத்துக் கொள்ளும்.

**உடலின் தோல் :**

நீங்கள் நினைப்பது போல், தோலானது உடலின் வெறும் போர்வை மட்டுமன்று. உடலிலே மிகவும் பெரிய உறுப்பு தோல் தான் என்று சொன்னுல் நம்பமாட்டீர்கள். உடலின் மொத்த எடையில் ஆறில் ஒரு பங்கைத் தோல் பெற்றிருக்கிறது. தோலானது மொத்தம் 20 அடிப் பெருக்கமான இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறது. ஒரு சிறிய அஞ்சல்தலை அளவுள்ள தோலில் 30 இலக்கம் நுண்ணறைகளும், 8 அடி நீளக் குருதிக் குழாய்களும், 12 அடி நீளமுள்ள நரம்பும், 100 வெயர்வைச் சுரப்பிகளும், 15 எண்ணெய்ச் சுரப்பிகளும் உள்ளன.

**மூளையின் திறன் :**

பிறக்கும்பொழுது மூளையின் எடை 12 ‘அவுன்சு’ தான் இருக்கும். ஆனுல் பருவம் அடைந்த பின்னர், ஆணுக இருந்தால் எடை மூன்றரை இராத்தலும், பெண்ணுக இருந்தால் 2 இராத்தலும் 11 அவுன்சுகளும் இருக்கும். பொதுவாகப் பெண்களைவிட ஆண்களின் மூளையின் எடை மிகுதியாக உள்ளது. அதனுலேயே ஆண்களின் அறிவுக் கூர்மை பெண்களினும் மிகுந்தது என்று கூற இயலாது. நாம் கற்கும் செய்திகளில் நூற்றுக்கு 90 பங்கை மூளை மறந்து விடுகிறது. இப்படிப் பெரும் பகுதியை மூளை மறந்தாலும் அமெரிக்காவிலுள்ள பெரிய நூல் நிலையமான பேராய நூலகம் பெற்றிருக்கும் 9,000,000 பொத்தகங்களில் அடங்கியிருக்கும் செய்திகளைப்போல் 10 மடங்கு அதிகமான செய்திகளைப் பதிவு செய்யும் திறனை அது பெற்றுள்ளது. சிக்கலான புதிர்களுக்கு விடை காணுது மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தாலும் சரி அல்லது சோம்பலாக அமர்ந்துகொண்டிருந்தாலும் சரி நம் மூளையானது ஒரே அளவு உயிர்வளியைத்தான் இயங்குவதற்காகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றது.

**சிறு நீரகம் :**

24 மணி நேரத்தில், நம் சிறு நீரகத்திலுள்ள 25 இலக்கம் வடிப்பான்கள் (Filters) ஏறத்தாழ 50 குடுவை நீரையும், 5 ‘இராத்தல்

நிறையுள்ள உப்புகளையும் குருதியினின்று பிரித்தெடுக்கின்றன. இவ்வாறு, வடித்தெடுக்கப்பட்ட நீரும், உப்புகளும், சிறுநீரகத்தின் உட்பகுதியிலுள்ள 39 கற்கள் நீளமுள்ள சிறுநீர் நுண்குழல்களால் உறிஞ்சப்பட்டு, பெரும்பகுதி மறுபடியும் குருதியுடன் கலக்கின்றது.

**சுவை அறியும் திறன் :**

நம் நாவிலுள்ள சுவை அரும்புகள் மிகவும் நுண்ணியதாகச் சுவையறியும் ஒப்பற்ற திறன் பெற்றுள்ளன. பத்துக் குடுவை நீரில் கரைக்கப்பட்ட ஒரு சிறிய கரண்டி உப்பைக்கூட அஃது எளிதில் உணர்ந்துவிடும். இதுபோன்றே 40 குடுவை நீரில் கரைக்கப்பட்ட ஒரு கரண்டி அமிலத்தின் புளிப்புத் தன்மையை எளிதில் நாக்கு உணர்ந்துவிடும். 1000 குடுவைத் தண்ணீரில் ஒரு கரண்டி 'கொயினு' குளிகையைக் கரைத்தால் கூட, நம் நாவிலுள்ள சுவையரும்புகள் கொயினுவின் கசப்பை எளிதில் உணர்ந்துவிடும்.

**ஊட்டச் சாரங்கள் :**

நம் உடலில் 10 குடுவை தொட்டியை நிரப்பக்கூடிய நீரும், நடுத்தர அளவுள்ள பெரிய ஆணி ஒன்று செய்யப் போதுமான இரும்பும் 7 பெரிய வழலைக்கட்டி (Soap) செய்யப் போதுமான கொழுப்பும் உள்ளன. 24 மணி நேரத்தில் இழக்கும் நீரை ஈடு செய்ய அன்றாடம் ஐந்தரை 'பைன்ட்' அளவுள்ள நீரை உட்கொள்ளல் வேண்டும்.

**எலும்பு :**

நம் உடல் மொத்தம் 222 எலும்புகளால் ஆக்கப்பட்டுள்ளது. எவ்வகையான எலும்பு நோய்களுக்கும் ஆளாகாமல் இருந்தால் இந்த எலும்புகள் யாவும் சேர்ந்து நம் உடம்பின் மொத்த எடையில் 15 விழுக்காட்டு எடையைப் பகிர்ந்து கொள்ளுகின்றன. ஒரு கன அடி எலும்பானது ஏறத்தாழ 119 இராத்தல் நிறையைத் தாங்கும் திறன் பெற்றுள்ளது; அஃதாவது உங்கள் எலும்பானது கருவாலி (Oak) மரத்தைவிட மூன்று மடங்கு உறுதிவாய்ந்ததாகும். கால் பகுதியிலுள்ள மிகவும் தடித்த முன்கால் எலும்பு (Tibia) ஏறத்தாழ 1.8 டன் நிறையுள்ள பளுவைத் தாங்கும் தன்மை பெற்றுள்ளது.

## ‘ஐந்திரம்’

(20-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(8) தொல்காப்பியர்க்கு முதலாசிரியன் அகத்தியன் என்பது பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பா மாலைப் பாயிரங்களால் விளக்கமாகிறது. ‘முந்து நூல்’ எனவரும் பாயிரத் தொடருக்கு ‘‘ஒரு நூலையே’’ குறித்தது என்பது சிவஞானசுவாமிகளின் தொல்காப்பியச் சூத்திர விருத்தியால் அறியப்படும் செய்தி. அன்றியும் அவர், ஐந்திரம் தொல்காப்பிய முதனூலாகாது என்பதனையும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

‘நூல் எனப் பொதுப்படக் கூறுது நிலத்தொடு முந்து நூல்’ எனச் சிறப்பித்தலான் ‘செந்தமிழ் நிலத்து மொழிதோன்றுங் காலத்து உடன் தோன்றிய நூல் அகத்தியம் ஒன்றே ஆதலானும், ஏனை நூல்கள் எல்லாம் அகத்தியத்தின் வழித்தோன்றியனவேயாம் ஆகலானும், ஐந்திரம் நோக்கித் தொடுத்தான் எனின் தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட் படுஞ் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை; முதலிய சில சொல் இலக்கணங்களும், உயர்திணை, அஃறிணை, முதலிய சொற்பாகுபாடுகளும் அகம்புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும் குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும், இன்னோரன்ன பிறவும், வட மொழியிற் பெறப்படாமையானும், இவையெல்லாம் தாமே படைத்துக்கொண்டு செய்தார் எனின் முந்து நூல் கண்டு என்பதனோடு முரணுதலானும் முற்காலத்து முதல் நூல் அகத்தியம் என்பதூஉம் அதன் வழித்தாகிய் தொல்காப்பியம் அதன் வழிநூல் என்பதூஉம் துணியப்படும் என்க.[1] சிறந்த உரையாசிரியராகிய பேராசிரியரும் அகத்தியரே முதல் நூலார் என்பர்.[2]

(9) அகத்தியரை உரையாசிரியர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். பிற்காலத்து இலக்கண ஆசிரியர்களும் சொல்லிச் செல்கின்றனர் (புறப் பொருள் வெண்பாமாலை: பன்னிருபடலம்). அகத்தியர் தொடர்பான பழஞ்செய்திகளும், கதைகளும் கூடத் தமிழில் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியரால், வெளிப்படையாகச் சுட்டிக் காட்டப்படாத அகத்தியர் பற்றிய செய்திகள் உண்டாகியுள்ளன.

---

1. தொல்காப்பியர் சூத்திர விருத்தி - கழகப்பதிப்பு. பக்கம் 7.
2. பேரா. உரை. மரபு. 649.

தொல்காப்பியப் பாயிரத்தில் வெளிப்படையாகச் சுட்டிக் காட்டப் படுவதாகச் சொல்லப்படும் "ஐந்திரம்" - பற்றி, விரிவான செய்திகள் போற்றப்படாமல் போனதற்குக் காரணம் என்ன ? 'ஐந்திரம்' என்ற தொடரை ஒரு நூலைக் குறித்த தொடராக அவர்கள் கொள்ளாதது தான் காரணமா ?

(10) ஏனைய இலக்கணப் பாயிரங்களில் இரண்டு முறை நூலா சிரியரின் முதனூற்கல்வி சுட்டப்படுகிறதா ? என்று ஆராய்ந்தேன்.

(1) நன்னூல்.
(2) நேமிநாதம்
(3) யாப்பருங்கலம்.
(4) யாப்பருங்கலக்காரிகை
(5) தண்டியலங்காரம்.
(6) நம்பியகப் பொருள்.
(7) புறப்பொருள் வெண்பா மாலை.

இவற்றுள் நூலாசிரியனைப் பற்றிய பாயிரங்கள், நேமிநாதம், தண்டி, யாப்பருங்கலக்காரிகை ஆகியவற்றுள் இல்லை.

ஏனையவை,

'முன்னோர் நூலின் பெயரின் வகுத்தனன்
பொன்மதில் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி' என்று நன்னூற்

பாயிரமும்,

'பாற்படு தென்தமிழ்ப் பரவையின் வாங்கி
யாப்பருங் கலநனி யாப்புற வகுத்தோன்!' - என

யாப்பருங்கலப் பாயிரமும்,

'தென்மலை இருந்த இருந்தவன் இயற்றமிழ்
கெழீஇய அப்பொருள் தழீஇ நோக்கி .....
பாற்கடற் பல் புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பி' என்று நம்பியகப் பொருள்

பாயிரமும்,

"தொல்காப்பியன் அருள் ஒல்காப் பெரும்பொருள்
அகப் பொருள் இலக்கணம் அகப்படத் தழீஇ"

எனப் பிறிதொரு நம்பியகப் பொருள் பாயிரமும்,

"பன்னிருபடலமும் பழிப்பின் றுணர்ந்தோன்
ஓங்கிய சிறப்பின் உலகமுழு தாண்ட
வாங்குவில் தடக்கை வானவர் மருமான்
ஐயனாரிதன் அகலிடத் தவர்க்கு"

எனப் புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரமும் வருகின்றன.

இவற்றுள் ஒன்றேனும் - நூலாசிரியனுக்கு முதல்நூற்களாக இரண்டு நூற்களைச் சுட்டவில்லை. வடமொழியாக்கம் எழுதிய நன்னூலார், வடமொழிக் கலப்பால் யாப்பு நெகிழ்ச்சிகளைத் தொகுத்துரைத்த அமிதசாகரர் போன்றார்க்கும் பிற வடமொழி நூற்கள் முதனூற்களாகக் காட்டப்படவில்லை. தலையாய இலக்கண நூலான தொல்காப்பியப் பாயிர மரபைப் பின்பற்றிய பிற்கால ஆசிரியர் - குறிப்பாக இம்மரபைப் போற்றாது விட்டிருக்க வாய்ப்பில்லை.

மேற்காட்டிய காரணங்களை நடுவு நிலையோடு எண்ணிப் பார்த்தால், ஐந்திரம் என்பது ஐந்திர 'வியாகரண' நூலைக் குறிக்கவில்லை என்பது விளக்கமாகும்.

இனி, ஐந்திரம் எனும் தொடர் எதைக்குறிக்க எழுந்தது என்பது ஆராயப்பட வேண்டும்.

ஐந்திணை என்ற தொடரை ஐந்து + திணை எனப் பிரித்தல் போல, ஐந்திரம் என்பதையும் ஐந்து + திரம் எனப் பிரித்தல் வேண்டும்.

ஐந்து - எண்ணுப் பெயர்.
திரம் - உறுதிப்பாடு [1] (குணம்).
திரம் > திறம் > உறுதி [2]
ஒப்புநோக்கு:- ஒளிர் > ஒளிறு; கருப்பு > கறுப்பு
'நீ திரத்து வாய்மை தவறி' -Æ

1. பார்க்க. தமிழ்மொழி அகராதி. நமசிவாய முதலியார் பதிப்பு (1922) பக்கம் 772.
2. பாவாணர். ஒப்பியன் மொழி நூல் - பக்கம் 141.
Æ வில்லிபாரதம். உலூகன் தூதுச் சருக்கம்.

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற தொடரின் பொருள், ஐந்துறுதிப்பாடுகள் - ஐந்து பண்புகள் நிறையப் பெற்ற தொல்காப்பியன் என்பதாதல் வேண்டும். +

நிறைவு - என்பது பண்பு நிறைவைச் சுட்டி வருதலைப் பல இடங்களிற் பார்க்கிறோம்.

'மாண்ட
பெண்மை நிறைந்த பொலிவு' - புறம் 337.
'நன்மை நிறைந்த நயவரு பாண' - புறம் 308

என்பன காண்க. ஆதலின் ஐந்து பண்புகள் நிறையப் பெற்ற தொல்காப்பியன் எனப் பொருள் கோடலே பொருத்தமாகிறது.

இலக்கண ஆசிரியர்கள், சிறந்த பண்புடையராய் இருத்தல் வேண்டும் எனப் பாயிரம் உரைப்போர் விரும்பி இருக்கின்றனர் என்பது கீழ்வருவனவற்றுல் விளக்கமாகும்.

'பண்புற மொழிந்தனன் பான்மையிற் றெறிந்தே' எனவரும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரமும்,

'வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்' எனத் தொடங்கி நல்லாசிரியர் இலக்கணம் கூறும் ஆத்திரையன் பேராசிரியர்ப் பாயிரமும்,

'உலகியல் அறிவொடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே'

எனவரும் நன்னூற் பாயிரமும், குணசாகரர் ['குணக்கடற் பெயரோன்' - யாப்பருங்கலப் பாயிரம்] என்ற ஆசிரியர்ப் பெயரும்; இலக்கண ஆசிரியனுக்கும், பண்பு நிறைவுக்கும் உள்ள தொடர்பை வற்புறுத்தும்.

### ஐந்து பண்புகள் யாவை ?

ஐந்திரம் - என்னும் தொடர் ஐந்துறுதிப்பாடுகளை - அல்லது ஐந்து பண்புகளைக் குறிக்க வந்தது எனக்கூறின், அவ்வைந்தும் யாவை என்பது இனி ஆராயப்பட வேண்டும். தொல்காப்பியர் ஒரு சமணத்துறவி > என்பது ஒத்துக் கொள்ளப்படின், சமண சமயத் துறவிகளுக்கு ஐந்து உறுதிப்பாடுகள் கூறப்படுவதை நோக்க வேண்டும்.

+ மாதிரத்தன் - என்ற குறுந்தொகை 133- ஆம் பாடலின் ஆசிரியர் பெயர் ஈண்டு நினைக்கத் தக்கது.

> திருக்குறள் வழங்கும் செய்தி. பேரா. சக்கரவர்த்தி (நயினர்) பக்கம் 27.

(1) ஊறன்மை (அகிம்சை) (2) வாய்மை (3) களவு செய்யாமை (4) மணவாமை (பிரமசரியம்) (5) தவம் என்பன சமண சமய விதிப்படி துறவிகட்கு வரையறுக்கப்பட்ட உறுதிப்பாடுகள் ff. இவற்றையே 'ஐந்திரம்' என்ற தொடர் சுட்டியிருக்க வேண்டும். அல்லது,

1) அன்புடைமை, 2) பழிநாணுடைமை, 3) ஒப்புரவுடைமை, 4) கண்ணோட்டம், 5) மெய்யுரை œ என்ற ஐந்து பண்புகளையும் கொள்ளலும் குற்றமாகாது. ஏனெனில் இலக்கிய, இலக்கண வளமிக்க தமிழுக்கு ஒருபுத்திலக்கணம் செய்தவன், பொருள்பாகுபாட்டை வகைப்படுத்தியவன், யாப்பமைதிகளைத் தொகுத்துரைத்தவன் - தொல்காப்பியன் எனும் சான்றோன் ஆதலின், சான்றோர்க்குரிய அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்னும் ஐந்து பண்புகளும் நிறைந்திருந்தான் என்று கூறுவதும் பொருந்துவதே.

சால்பு - என்றால் பண்பு நிறைவு, சான்றாண்மை என்பதற்குப் 'பலகுணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளல்தன்மை" எனப் பரிமேலழகரும் உரை செய்தமையும் ஈண்டுக் கருதத்தக்கது. தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியர் பண்புகள் ஐந்தும் உடையராய் இருந்தார் என்பதே 'ஐந்திரம்' என்ற தொடரின் கருத்தாதல் வேண்டும்.

---

(ff) The Cultural Heritage of India Vol. I.
Jaina Philosophy - P. 400.

(œ) திருக்குறள் மணக்குடவருரை; 983, சான்றாண்மை.

---

'தமிழ்நெஞ்சமே' 'தென்னவ'னுகப் பெயர் தாங்கி
வெளிவருகின்றது
சிறந்த அறிவுப் படைப்புகளைக் கொண்டது
"தென்னவன்"
திங்களிதழ் விலை -- 30 காசுகள்
சிறப்பாசிரியர் ஆசிரியர்
க. அறிவழகன், எம். ஏ. 'தென்னவன்'
(விற்பனையாளர்கள் தேவை)
முகவரி; "தென்னவன்", பாண்டிக்குடி
பனங்குளம் - அஞ்சல் பட்டுக்கோட்டை வட்டம்.
தஞ்சை (மாவட்டம்)

## பாட்டரங்கம்

மானப்போர் ! இரா. கிள்ளிவளவன் இரும்புதலை

உறங்கிப்பன் ஞட்கழித்த தமிழா நின்றன்
உறக்கத்தை நீக்கிடுவாய்; விழித்துக் கொள்வாய்;
இறங்கிய, நின் புகழ் காப்பாய்; தமிழர் இந்நாள்
இழிவுறும் தீ நிலைநினைப்பாய்; புரட்சி செய்ய
நெறிபடைத்த நெஞ்சுடனே நிமிர்ந்து நிற்பாய்;
நெஞ்சழுத்தம் உள்ளதமிழ்ப் படையைச் சேர்ப்பாய்;
மறத்தமிழா இஃதுன்றன் மானப் போரே
மன்னுதமிழ் நிலைகாக்கச் செய்யும் போரே !

தமிழ் முழக்கம் ! கடவூர் ப. முத்துச்சாமி, கரந்தை.

தென்றமிழைத் தெருவெங்கும் பரப்பல் வேண்டும்;
தென்னவர்தம் கலையொழுக்கம் பேணல் வேண்டும்;
மன்றமதில் தனித்தமிழே முழங்கல் வேண்டும்;
மறுமலர்ச்சிக் குமுகாயம் அமைத்தல் வேண்டும்;
தன்மானம் தமிழுணர்வைப் பெருக்கல் வேண்டும்.
தகவின்மைச் செயல் முறையைக் கழித்தல் வேண்டும்.
வென்றியினுல் சிறப்புதனைக் கூட்டல் வேண்டும்
விறல்சான்ற தமிழ்ப் பண்பைப் புகுத்தல் வேண்டும்'

செந்தணல் மூட்டுக! அ. பட்டம்மாள், உளுந்தூர்ப்பேட்டை.

“ தாய்மைக் குலத்தீர் ! தமிழ் மொழிக்கே யாம்பாடும்
வாய்மைத் தமிழ்ப் பாவை வந்திங்கு கேண்மினோ!
தூய்மையுறும் நெஞ்சம் சுடர்மணிப்பூண் தோள்கலிக்கும்
பேய்மை யகலும்! பிறவிநலம் வந்தெய்தும்!” . . . .
என்றவர் தொடங்கிய எழுச்சிப் பாடலை
நன்றே ஓர்ந்து, நாமதை ஏற்றுச்
செவ்விய உணர்வொடு செந்தமிழ் நாட்டார்
ஒவ்விய உரிமைக் குயிர்தரல் மேலாம்!
இன்னமும் உணர்வின் றிருப்போ மாகில்
தன்னுரி மைத்தாய் நாடினும் அழியும்!
செந்தமிழ்த் தாயின் சிறைவாழ் வழிக்கச்

செம்புலிக் கூட்டமே, செந்தணல் மூட்டுக!
வண்டமிழ் இன்றே விடுதலை பெற்றிடத்
தென்மொழி மறத்தியீர்! திரண்டுடன் எழுகவே!

கண்ணைப்பிடுங்கி விரட்டு! — கயற்கண்ணன், மணக்குடி

கன்னல் சுவைத்தமிழுக்(கு)
இன்னல் புரிந்தும் உண(வு)
உண்ணல் பெரிதெனுமோர் பேடி-நம்
அன்னைத் தமிழகத்து
மண்ணை மிதித்திடாமல்
கண்ணைப் பிடுங்கி விரட் (டு) ஓடி!

துள்ளல் நடைச்சிறப்பின்
தெள்ளு தமிழ்மொழிக்குக்
கள்ளம் நினைப்பவர்கள் எங்கே? - அவர்
உள்ளம் இரும்பெனினும்
கல்லாம் உடலெனினும்
மல்லுக் கழைத்திடுவேன் இங்கே!

வீறுகொளல் என்று? — முத்தமிழன், சிங்கப்பூர்.

தமிழாகுந் தாய் அவளைத் தரக்குறைவாய்க் கூறும்
தருக்கர்களை இடித்துமுறை தனைச்சுட்டுந் தொன்மைத்
தமிழ்வாழும் நெஞ்சுடைய தகையோர்க்குத் தந்த
தண்டனையே சரிநெறியாம்! சற்றுய்ந்து பார்மின்!
தமிழ்வாழ வகை கண்டார், வழிகண்டார் ஏற்கத்
தக்கதுவோ சிறையென்றால் தமிழ்நெஞ்சம் ஏற்கா!
அமிழ்தாகுந் தமிழ்த்தாயின் அறநெறியே உன்னை
அழிப்பாரைக் கண்ணுற்றும் அடங்கினையே, ஏன்? ஏன்?

ஈன்றவளைக் கொன்றொழிக்க எழும் வாழை யன்னார்
இருக்கின்றார் கொழுப்பேற இன்பநலந் துய்த்து!
சான்றொழுகும் அறிவாற்றல் தனையறியாச் சில்லோர்
தமிழறிஞர் எனப்பிதற்றி அலைக்கின்றார்; பொய்மை
ஊன்றுதரப் பெற்றபுகழ் உலுத்தொருநாள வீழும்
உணர்வறியாச் சிறுநரியோர்க் குயர்வாழ்வு காணீர்!
ஆன்றவிந்த தமிழ்த்தாயே! அரியணையில் நின்றே
அறங்காத்த சிறப்பெங்கே? அற்றை நெறி எங்கே?

நாற்றுக்கு நடுநின்று நன்றுவளர் களைபோல்
நன்மைக்குள் ஊடுருவித் தீமைவளர் நிலைபோல்
சோற்றுக்குத் தமிழ்பாடும் தீயவரே, இன்பத்
துய்ப்பினிலே நின்ருடத், தூய்தமிழே முச்சாய்
ஏற்றெழுகும் நல்லவரின் இருப்பிடமோ சிறைதான்,
எனும்போழ்து நெஞ்சுருகி இளகுதையோ, அன்னுர்
வீற்றிருக்கத் தக்கதுதான் வெஞ்சிறையும் என்ருல்
வீறு தமிழ் ஏறுகளே வீறுகொளல் என்ரே?

## ஞாயிறு

மணிமாறன், சென்னை-15.

ஞாயிறே! நன்ரும் வெப்பம் நல்கிடுந் திருவே! நீர்சூழ்
மாயிரு ஞாலம் முற்றும் விரிதரு புன்மை மிக்க
தாயிரும் இருளை நீக்கும் பொற்சுடர்க் குன்றே! நீள்கை
ஆயிரம் நீட்டி வைய மனைத்தும்நீ தேடல் என்னை?

நீரினை யாவி யாக்கி நயனுறு கொண்ட லாக்கிப்
பாரினைச் செழிக்கச் செய்யும் பயனுறு மாரி தந்து
சீரினைப் பெற்ருய்! ஓங்கு மரந்தனைக் காக்கு மாணி
வேரினை யொப்ப மாந்தர் வாழ்வினைக் காவா நிற்பாய்.

பாலையிற் கானல் நீராம் பாரிடை மாந்தர் வாழ்க்கை.
ஆலையிற் பஞ்சாய் நெஞ்சை யாக்கிடுந் துயரைப் போக்கச்
சோலையிற் பூத்த பூப்போல் சிரித்திடு முலக முன்னுல்!
மாலையிற் சூழ்ந்த துன்புன் விழிப்பிலே மடியும் நன்றே!

உயிர்க்கெலாந் தாதை நீயே! உண்மையு மறிவும் நீயே!
உயிர்க்கெலாந் தலைவன் நீயே! ஒளிக்கெலா முதலும் நீயே!
உயிர்க்கெலாம் உயிராய் நின்றே யுணர்வினைத் தருவாய் நீயே!
பயிர்க்கெலாம் மாரி நீயே படைப்பவன் நீயே யாவும்!

தண்ணிலா வுன்னிடத்தே தங்கொளி வாங்கி யன்ரே
மண்ணிலா ரிருளை நீக்கி வையக வாழ்த்துப் பெற்ருள்!
எண்ணிலா வுயிரின் கூட்ட மியங்குத லுன்னு லென்றே
விண்ணிய லறிஞ ரெல்லாம் விளக்கினர்; நின்பேர் வாழி!

## மலர்

புலவர். எ. வே. திருப்பதி.

சின்னக் குழந்தையின் முகத்தினைப் போல் நகை
சிந்தும் புதுமலரே-வான
மின்னைக் குழைத்ததில் மூழ்கித் திளைத்தனை
மயக்கும் சிறுமலரே !

என்னை அழைக்கிறாய் என்ன உரைப்பாய் நீ
ஏனடி பொன்மலரே - அதோ
உன்னை அணைத்திட ஓடிவரும் வண்டு
வீணை இசைக்குதடி!

காலை மலர்ந்திதழ் காட்டிச் சிரிக்கின்றாய் !
காதலில் நீ அரசி - ஆம்;
மாலை வருமுன்னே மயங்கிப் புலம்புவாய்
மண்ணிலே வீழ்வதற்கோ ?

ஆடி அசைகிறாய்; அசைந்து நகைக்கிறாய் !
அடடாவோ நீ குழந்தை - ஆம்
வாடி அழியினும் வாழ்வைச் சுவைக்கிறாய்
வாழ்க ! எழில் மலரே !

கனவென வாழ்வினைக் கருதிடும் மாந்தர்கள்
காலையில் வீழ்ந்திடுவார் - இன்பு
நினைவினில் நீந்தி நீ நட்பை விளைத்திங்கு
நிலைத்திட வா மலரே !

## உறக்கம் உண்டோ ?

இரா. துரைசாமி,
திருப்பனந்தாள்.

நாட்டைத்தான் ஆண்டுவிட்டார் பலரும் வந்து
நாமுந்தாம் கண்டிருந்தோம் செயலொன் றின்றி
பூட்டிவிட்டார் செந்தமிழைச் சிறையில் இன்று
புறப்படுவோம் புலிபோன்று புல்லர் தம்மின்
கூட்டத்தைக் கூண்டோடு மாய்ப்போம் ; வாழுங்
காலமெல்லாம் தமிழ்சிறக்க வழியைக் காண்போம்
நாட்டிடுவோம் தமிழ்க்கொடியை உலக மெங்கும்
நடுமொழி ஆளாமல் உறக்கம் உண்டோ ?

## வீழ்த்துங்கள் இந்திதனை!

அறந்தைத் திருமாறன்

வான்கோழி யோமயிலுக் கீடு; கெட்ட
வங்குசொறி நாயோவல் லரிமா ஒக்கும்?
மான் ஆட்டின் கீழென்றால் கேட்டுக் கொள்ள
மடயர்களா தென்புலத்தார்? ஆய்ந்து தேர்ந்த
தேன்போலும் தமிழைவிட இந்தி மேலோ?
தென்மொழிக்குப் புன்மொழியோ ஈடு சொல்வீர்;
வீண்பேச்சேன் செந்தமிழீர் வேட்கை கொண்டு
வீழ்த்துங்கள் இந்திதனை; முடிவு பின்னர்!!

## முரசறைவீர்!

கடலூர். ப. மணிமாறன், கரந்தை

அஞ்சாமை அறிவூக்கம் ஈகைப் பண்பால்
அரசாண்டோர் பிறங்கடையீர்! பெருமை சான்றீர்!
நஞ்சனையார் சூழ்ச்சிகளும், திமிரும் நாளும்.
நலிந்துவரும் கொடுநிலையும், வறுமை நோயும்,
மிஞ்சுகின்ற வன்முறையும், மேன்மை குன்றி
மிடுக்கிழந்த இழிதகைமைச் செயலும் யாண்டும்
கொஞ்சுகின்ற கீழ்மைகளும் தமிழர் கூட்டம்
கிளர்ந்தெழுந்தால் எஞ்சிடுமோ? எழுச்சி காண்பீர்!

விழியொக்கும் மொழிகாவா வாழ்க்கை நந்தம்
வெந்திறல்சால் மறக்குடிக்கு வேண்டு மாமோ?
கழிசடையர் கொடுங்கோலால் தமிழ நாட்டார்
காரிருளில், வல்லடிமைச் சேற்றில் மூழ்கி
இழிவார்ந்த, புரைதோய்ந்த நெறியிற் சென்று
இழிந்திடவா நாம்பிறந்தோம்! ஆய்ந்து பாரீர்!
விழிப்புணர்வால் ஆர்த்தெழுவீர்! தமிழ கத்தை
விடுவிக்க முரசறைவீர்! வெல்வீர் நன்றே!

## அழகு அன்னை

த. செயராமன், கரந்தை

மலைமீதில் குளிர்ச்சுனையில் மலர்ந்த பூவில்,
மணமென்னும் புகழ்க் குன்றில் ஓடை தன்னில்,
இலைமீதில்; இலைதழுவும் அரும்பின் மீதில்,
இளந்தென்றல் குளிர்மீதில் தென்னை மீதில்

குலைமீது பறக்கின்ற கிளியின் மீதில்
குலுங்குகின்றாள் எழில் அன்னை! காணும் போழ்தில்
அலைவீசும் தேன் பொய்கை நெஞ்சில் காண்பேன்!
அழகவளை நாள்தோறும் வாழ்த்து கின்றேன்.

காதற்கனிமொழி. அலைமணற்குழவி, தரங்கம்பாடி.

ஆழித் திரைக்கைகள் அள்ளியந் திங்கள் அணைக்கவர
யாழில் தவழ்ந்தாடும் இன்னொலி உள்ளம் இழுக்கவர
பாழில் உடுக்கூட்டம் பன்னிறத் தோற்றம் படைத்தளிக்கத்
தோழியர்க் கண்ணீங்கித் தோன்றுவள் காதற் கனிமொழியே!

புள்ளினச் சிற்றொலி பூங்காப் புறத்து மிதந்துவர
தெள்ளிய ஓடையின் தேன்மலர் நன்மணம் சேர்ந்துவர
உள்ளிய தெல்லாம் ஒருமித்துக் கூடி உவந்துவரத்
துள்ளி வருவாள் துணையின்றிக் காதற் கனிமொழியே!

பட்டும் படாமலும் பன்மணத் தென்றல் தவழ்ந்துவர,
தொட்டுந் தொடாமலும் தூமணிச் சீரிசை தூங்கிவர,
வெட்டும் வெடிமின்னல் வீசும் புயலொடு வீங்கிவர
மெட்டி குலுங்கிட மேவுவாள் காதற் கனிமொழியே!

பொங்கும் கதிரவன் பொய்யா ஒளிப்பொன் பொலிந்துவர
மங்கி வளர்கின்ற திங்கள் குளிர்மை திரட்டிவர
எங்கும் தனித்தமிழ் இன்ப இயக்கந் தழைத்துவர
அங்கண் மருண்டிட அண்டுவாள் காதற் கனிமொழியே!

வழிச்செலவு. காரை - இரெ. சுப்பிரமணியன்.

நண்ணி நடக்கும் நெடுவழியில் நாடகம் எத்தனை பாரடி நீ!
கண்ணில் தெரியும் காட்சி யெலாம் கானலின் நீரடி கண்மணியே!
பண்ணில் வளரும் பூங்குயில்கள் பாடித் திரியும் பொழிலிங்கே,
எண்ணிக் கொடுத்த சுமைதன்னை இறக்கடி கொஞ்சம் இளையவளே!

முன்னும் பின்னும் குழப்பமடி! முகிழ்த்த விழிகளில் ஏக்கமடி!
இன்னும் எத்தனை கற்களடி இரும்போ நமதிரு கால்களடி?
பின்னும் ஏனோ நடக்கின்றாய்? பிணைத்த நடையை நிறுத்தடிநீ!
உன்னும் களைப்பிங் காறிடுவோம்! உவந்தினிக் கொஞ்சம்
துயின்றிடுவோம்!

தொடர் சு

# மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்,

செ. சுந்தரராசன். சொத்தவிளை,

புத்தளம் அஞ்சல், குமரி மாவட்டம்.

**அசத்தல்** - ' அறுவை ' செய்தல் (Boring)

**உழவீடு** - சாப்பாடு, உணவு.

**கால்அதர்** - காற்று செல்லும் வழி (Ventilator).

**கோரு** - மொள் (நீர் கோரினுன் - நீர் மொண்டான்)

**கும்மாயம்** - கடற்சிப்பியைச் சுட்டுப் பொடியாக்கிய சுண்ணும்பு; சுண்ணும்பு, மணல், நீர் சேர்ந்த சாந்துக் கலவை.

**' பாட்டம் ' கொடுத்தல்** - குத்தகைக்கு விடல்.

**படுவத்தடி** - வாய்க்கால் பக்கத்தில் உள்ள செழிப்பான வயல்.

**மிலாக்கன்** - அறிவு அதிகமின்றி, உடல்வலு மிக்கவுடையவன்.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்,

சே. காந்தி, சதுர்வேதமங்கலம் (அஞ்சல்)

திருப்புத்தூர் வட்டம், முகவை மாவட்டம்.

**சூலக்கரை** - குயவர்கள் பச்சை மண்பாண்டங்களைச் சுடுமிடம்.

**அச்சுக்கட்டு** - க்ண்மாய் நீர்ப்பாசன மற்றுப் புன்செய் நிலங்களை ஒட்டியிருக்கும் நன்செய் நிலங்கள்.

**சாரங்கட்டுதல்** - மிக உறுதியான நிலத்தை உழ வேண்டிக் கிணற்றிலிருந்து நீர் இறைத்துப் பாய்ச்சிப் பதப்படுத்தல்:

---

முன்பக்கத் தொடர்ச்சி.

ஆடிக் காற்றில் ஆலிலையோ ? அமைதிப் பாட்டையில் பேரொலியோ ?
மூடிக் கிடக்கும் விழிகளிலே மூண்டிடும் ஊழின் வெறிச் செயலோ?
பாடிக் களிக்கும் குயிலிசையில் படிந்து துயில்வோம் வினவழியே!
வாடிக் கருகும் நமக்கிங்கே வந்தது பாராய் இளந்தென்றல்!
விளந்த வயலின் அறுவடைக்கு விரைந்தினிப் போகும் உலகினைப் பார்
அளந்த காற்றுப் போவதற்குள் அறுத்திடு நெல்லினைத் தூற்றிடவே
களந்த களத்தில் எத்தனைபேர் கண்ணிற் கொள்ளாக் காட்சியடி!
வளந் தபூங்கிளைப் பந்தலிதோ! விரித்த மாமணல் பஞ்சணைபார்

வேவெடுத்தல் - திருமணம் நடக்கும் குடும்பத்திற்கு மாமன் முறைகாரர்கள் சீர்வரிசைகள் கொண்டு செல்லல்.

காடாத்து - இறந்தவரைப் புதைத்த மறுநாள், சங்கு சேகண்டிகளுடன் சென்று புதைத்த இடத்தில் நீர் தெளித்து மாலே சூட்டி வணங்கி வருதல்.

பஞ்சாரம் - கோழிகளே அடைக்கக்கூடிய ஈஞ்சால் ஆன பெரிய கூடை.

கொப்பி - மாட்டுச் சாணத்தையும், பறங்கிப் பூவையும் இணைத்துத் தட்டி உலர வைத்தல்.

நேர்த்திக் கடன் - தெய்வத்திடம், எனக்கு இன்ன நன்மை விளைந்தால், அதன்பின் உனக்கு இன்ன சிறப்புச் செய்வேன்' என வேண்டிக் கொள்ளுதல்.

இராவாத்தால் - மணமாகாத பெண்கள், சுறவ(தை)த்திங்கள் இரண்டாம் நாள் (நல்ல கணவன் கிடைக்க வேண்டிக்) கொப்பிகளேக் கொண்டுசென்று நீரிலிட்டு நிலவினே வணங்குதல்-

நடைதப்பு - நடந்து போகும்போது அடிக்கும் பறை.

திட்டை - இரும்பாலான விரிந்த வாயையுடையது.

நெல் குற்றுபவர்கள், சிதருமலிருக்க உரல் மேலும் பயன்படுத்துவர்.

கங்காணம் - குத்தகைக்கு விட்ட நிலத்தின் விளேவிலிருந்து வரும் பங்கு.

முதற்கரை - ஊர்த் தெய்வத்திற்குத் தொண்டு செய்பவர்களேப் பல பிரிவுகளாகப் பிரிப்பர். முதற் பிரிவைச் சேர்ந்தவர் முதற்கரையாவர்.

முளேப்பாரி - மழை பெய்யவேண்டி வாரண (வருண)னுக்கு விடை (வைகாசி)த் திங்களில் கொண்டாடும் விழா.

காளாஞ்சி - தெய்வத்தை வணங்கியவர்களுக்குப் பூசார்த்திகள் (பூசாரிகள்) கொண்டுவந்து தரும் தேங்காய் மூடி, பழம், வெற்றிலே, பாக்குகளேக் குறிக்கும் (பிரசாதம்)

மூடு - குட்டி போடாத இளமை ஆடுகளேக் குறிக்கும்.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:
தமிழ்க் கூத்தன், காரணித்தோட்டம், சென்னை-15.

உரைமுறையார் - தீர்ப்பு வழங்கும் ஊரவையோர் (Juries).

அம்பலக்காரன் - பெருங்குடிமகன்.

கட்டாந்தரை - தொழுவம்.

குலுமை - குதிர். புட்டாணி . இடுப்பெலும்பு.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்.
சு. சங்கரபாண்டியன், அய்யாபுரம், நெல்லை மாவட்டம்.

துட்டி - இறந்தவர் வீடு. தொடுவை - வைக்கோல் கிண்டும் கருவி.

வளைச்சாக்குழி - நெல் போடும் இடம்.

புதுவிளை - சுடுகாடு.

போடு - வயல்களில் ஒரு தொளை வழியாக நீர் கசிந்து செல்லுதல்.

கமலை - தண்ணீர் இறைப்பதற்குப் பயன் படும் கருவி.

கங்களா - விதை விதைத்த மூன்றும் நாள் தண்ணீர் பாய்ச்சுதல்.

வாமடை - ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்குத் தண்ணீர் செல்லும் வழி.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்.
குருபெருமாள், மேலைச்சேரி புலவர் கல்லூரி மாணவர்,
சாத்தூர் வட்டம், முகவை மாவட்டம்.

குறுக்கம் - முக்கால்காணி (ஓர் ஏக்கர்) நிலம்.

சாலடித்தல் - நாலேர்ச்சால், எண்ணேர்ச்சால் என இருவகைப் படும், ஒரேரால் நான்கு முறை, எண்முறை சுற்றி வருவது.

பொலி - களங்களில் குவித்திருக்கும் தானியக் குவியலின் பெயர்; நிலங்களின் பிரிவு வகை தெரிவிக்கும் வரப்பின் பெயர்.

குண்டு - நெற்பயிர் நடும் பெரிய சவுக்க (சதுர) வடிவங்களின் பெயர்.

வறையோடு - பொருள் வறுக்கும் உடைந்த பானையின் பெயர்.

சிறுக்கண் - திருவிழாக் காலங்களில் அமைக்கும் பந்தல்.

குழுக்கை - தவசங்கள் (தானியங்கள்) கொள்ளும் மண்ணாலான நெடுஞ்சால் (களஞ்சியம்).

செதுக்கி - புற்பூண்டு செதுக்கும் கருவியின் பெயர்.

குச்சில் - காடுகளில் காவலுக்கு அமைக்கும் குடிசை. பருவம் எய்திய பெண்களுக்கு அமைக்கும் மறைவு இல்.

தாலவட்டு-பண்டையர் உணவருந்திய பாண்டம், அவை பொன், வெள்ளி ஆகிய மாழைகளினால் வட்டமாக அமைக்கப்பட்டிருக்கும்.

வால் - இறைவைக்குப் பயன்படும் தோலாலான ஒருபை.

குத்துக்கல் - நிலங்களை வரையறுத்து நடும் கற்களின் பெயர்.

**கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்.**

இரா. நடராசன் (ஆசிரியர்), சின்னத் திருமங்கலம்,
சி. கூடலூர் அஞ்சல், கரூர் வட்டம்.

அசுகனி - உண்ணி என்றும் பெயர். மாடு, ஆடு போன்ற உயிர்களின் இடுக்குகளில் வாழும். இதற்கு உணவு, விலங்குகளின் குருதி.

**தெகை** - மாட்டின் ஈக்குப் பெயர்.

**அகனி** - பனைமரத்துப் பட்டையிலிருந்து எடுக்கப்படும் நார். ஆக்கை என்றும் பெயர்.

**ஆனம்** - குழம்பு. ஒல் - உரல்.

**பார்** - பாத்திகளில் வரப்புப் போன்ற மேடான பகுதிகள்.

**கந்தாயம்** - குத்தகை.

**கருத்தடி** - கலப்பையில் உள்ள நீண்ட தடி.

**பாசம்** - கருத்தடியும், கலப்பையும் பிணைக்கப்படும் இடத்திற்குப் பாசம் என்று பெயர்.

**கடைமுளை** - நுகத்தடியில் மாடு வெளியே செல்லாமல் செருகப்பட்டிருக்கும் ஒரு மரத்தாலான குச்சி.

**தும்பு** - நுகத்தடியை மாட்டின் கழுத்து மீது வைத்துப் பூட்ட உதவும் கயிறு.

**ஆரக்கால்** - சக்கரத்தின் கால்கள்.

**கும்பம்** - சக்கரத்தின் மையம்.

**வட்டை** - சக்கரத்தை வட்டமாக ஆக்கும் வளைந்த மரம்.

**கொடிமரம்** - (போல் மரம்) வண்டியை முதலிலிருந்து கடைசி வரை இணைக்கும் நீண்ட மரம்.

**கொடுங்கை** - கூரை வீட்டுத் தாழ்வாரத்தைத் தாங்கத் தூணில் பொருத்தப்பட்டுள்ளது.

**சுவரொட்டி** - ஆட்டின் கணையத்திற்குப் பெயர்; வீட்டுச் சுவரின் மேலிருந்து கூரையைத் தாங்குவது.

**அரியாந்திரம்** - வீட்டில் விட்டத்தின் மேல் நின்று கூரையைத் தாங்கும் செங்குத்து மரம்.

**துலைக்கட்டிடம்** - கிணற்றில் ஒரு பக்கத்தில் தண்ணீர் இறைக்கக் கட்டப்படும் கட்டிடம்.

**பாம்பேறி** - கிணற்றைச் சுற்றிலும் உட்புறம் கிணற்றின் பக்கங்கள் இடியாமல் கட்டப்பெறும் கட்டிடம்.

**தோரணப்பலகை** - கிடை மரத்தின்மீது நிற்கும் குத்துக்கால்களின் மீது போடப்பெறும் பலகை.

**சிறகு** - தோரணப் பலகை மீது பொருத்தப்பட்டுள்ளது. இதன் மீது வண்டியைப் பொருத்துவர்.

**சால்** - இரும்பாலானது; தண்ணீர் இறைக்கப் பயன்படுவது.

**தும்பி**-பறி என்றும் பெயர்; மாட்டுத் தோலால் தைக்கப்பெறும்; தண்ணீர் இறைக்க உதவும்.

**குடாப்பு** - சிறிய நீண்ட குச்சிகளால் பின்னப்பட்டது. இரவில் ஆட்டிளங் குட்டிகளை அடைக்க உதவும்.

---

## அறுவை, துணி, சவளி, ஆடை.

அறுக்கப்படுவதனால் அறுவை என்றும், துணிக்கப்படுவதனால் துணி என்றும், சவண்டிருப்பதனால் சவளி என்றும் ஆடை பல பொதுப் பெயர் பெறும். சவளுதல்-துவளுதல். மென்காற்றிலும் ஆடுவது (அசைவது) ஆடை. சவளி என்னும் தமிழ்ச் சொல், த்ஜவளி என்று தெலுங்கிலும் ஜவளி என்று கன்னடத்திலும் எடுப்பொலியுடன் ஒலிக்கப் படுவதாலும், தமிழிலும் அங்ஙனம் இற்றைத் தமிழர் ஒலிப்பதாலும், வட சொல்லென்று தவறாகக் கருதப்படுகின்றது. வடமொழியில் இச்சொல் இல்லை. (- ஞா. தே.)

# அச்சக அமைப்புக் கடன் திட்டம்

(1-3-66 முதல் 15-4-66 முடிய அலுவலகத்திற்கு வந்த தொகைகள்)

## கடன்

| வரிசை எண். | முகவரி | உருபா | சான்றிதழ் எண். |
|---|---|---|---|
| க. | பத்து உருபா வகை : | | |
| 1. | திரு. பெ. மாரிமுத்து, ஆசிரியர் சிறுவங்கூர். | 10 | 89 |
| உ. | நூறு உருபா வகை : | | |
| 1. | திரு. க. ஆ. முருகேசன் பெரியநாயக்கன்பாளையம். | 100 | 13 |
| 2. | திருவாட்டி. தங்கம் தங்கப்பா | 200 | 14-15 |
| | | 310 | |

## அன்பளிப்பு

திரு. அருள்மணி, பெங்களூர்-3 — 2

திருவாட்டி. வே. தமிழரசி, அரியாவூர் — 2

திரு. அ. இராசேந்திரன், பெங்களூர்-1 — 1

அவர்வழி,

திரு. ஞானவேல், — 2

(தலைக்கு ஓர் உருபா மேனி,) திருவாளர்கள்

இரா. அப்பன், தெ. கவிச்சந்திரன், வீ. வில்வநாதன்,
தி. ஆ. பழனி, தி. சு. செங்கல்வராயமூர்த்தி,
சி. சுப்பிரமணியன், ந. சண்முகம், மு. சின்னச்சாமி,
நா. தாமோதரன் — 9

உலோகநாதன், அ. சொ, வேங்கடேசன், கோ. சீனிவாசன்
ந. செயராசன், மு. பொன்னுசாமி, கோ. சுவாமிநாதன்,
த. இசுரவேல். பார்த்தசாரதி, அ. இராதா,
சி. எசு. மணிமாறன், சி. செகன்னாதன்,
எசு. சுந்தராம்பாள் (தலைக்கு 50 காசுகள் மேனி) — 6

திரு. முனிசாமி 0-25

திரு. ஏ. ஐசக், இளங்கோ படிப்பகம், சோனகன்விளை 1

திரு. ஆ. விந்தன், கவுந்தப்பாடி - அவர் வழி,
இரா. பழனிச்சாமி, க. ப. கதிர்வேல்,
க. அ. கோவிந்தசாமி, (தலைக்கு ஓர் உருபா மேனி) 3

திரு. இரா. தேவராசன், 2

மேட்டுப்பட்டித்தாதனூர் தமிழ்க்காப்புக் கழகச்
செயலாளர் வழி, திரு. ஆறுமுகம் 2

திருவாளர்கள் கோ. இராமச்சந்திரன், துரை-அலர்மேலு,
அ. பரமசிவம், பாலசுப்பிரமணி, கா. கருங்குழலாள்,
கோ. சண்முகவள்ளி (தலைக்கு ஓர் உருபா மேனி) 6

திருவாட்டி. து. பூங்கோதை, காட்டுக்கோட்டை 5

அவர்வழி, திரு. வெ. இளம்பெருவழுதி 2

திரு. தங்கவேல், சார்வாய்ப்புதூர் 1

திரு. வி. பொ. பழனிவேலன், பி. ஒ. எல்.
திருத்துறைப்பூண்டி, 10

அவர்வழி, து. வே. செயராமன் பி. ஏ. கோட்டூர்
வி. கோதண்டபாணி, திருத்துறைப்பூண்டி.
இராசகாத்தையன், திருத்துறைப்பூண்டி,
மா. தங்கராசன், மேற்பனைக்காடு. சா. நடனசிகாமணி பி. எசி.
கோட்டூர் (தலைக்கு 2 உருபா மேனி) 10

கோட்டூர் ஆசிரியர்கள் திருவாளர்கள்:
பா. சேதுராமலிங்கம், நா. சுப்பிரமணியன்,
பா. சின்னையன், மா. சுப்பிரமணியன்,
இரா. கிருட்டிண்மூர்த்தி' குழ. சிங்காரவேலன்,
கு. பழனிவேலன், இ. சொ. கிருட்டிணமூர்த்தி,
கு. செகந்நாதன், (வெங்காத்தான்குடி)
ந. வே. பாலு, திருவாட்டி. மின்னல்கொடி,
திரு. சி. பண்டரிநாதன். திரு. கா. இராமச்சந்திரன், திருத்துறைப்பூண்டி, கோட்டூர் க. உ. பள்ளி மாணவர்கள், சி. சம்பந்தம்' அரங்க. குமரன், ம. தெட்சிணாமூர்த்தி,
பெ. வேணுகோபாலன், இரா. தருமையன், இரா. தங்கையன்,
நா. நடராசன், க. நாகரத்தினம். இரா. சீவராசன்,

பொ. சூரியமூர்த்தி, கோ. பக்கிரிசாமி, மே. இராசேந்திரன்,
க. நடராசன், கை. சுப்பையன், ப. கோவிந்தராசன்,
மா. மாசிலாமணி, பே. இராசேந்திரன், க. சுப்பிரமணியன்,
இரா. சந்திரன், சே. சோமசுந்தரம், ந. பாலசுந்தரம்,
அ. காதர்முகைதீன், கோ. நாராயணன், இரா. பாரிசாதம்,
த. செயபால், உ. அந்தோணிசாமி, மு. கலியமூர்த்தி,
ந. துரைராசன், தெ. அமலாதித்தன், உ பாலச்சந்திரன்,
ச. வீரமணி, மு. வீராசாமி, சாலை ஆய்வாளர், கோட்டூர்,
(தலைக்கு ஓர் உருபா மேனி) 45

திரு. சோ. பாண்டுரங்கன், மாணவர் 1-50

திரு. இரா. அம்பிகாபதி, மாணவர் 0-50

திரு ஆ. விந்தன் (கவுந்தப்பாடி வழி)
சென்னிமலை, செட்டிப்பாளையம் 2-00

திருவாளர்கள், கருமண்டர் எசு. சி. பசீர், இராமலிங்க
விலாசம், துணிக்கடை, கவுந்தப்பாடி
(ஓர் உருபா மேனி) 3-00

திரு. மு. கணேசன், அபிசேகபுரம் 2-00

திரு. பல்லவன், ஆயர்பாடி 1

அவர்வழி, திரு. இர. எழில், திரு. அ. விசுவநாதன்
(5 உருபா மேனி) 10

திரு. அ. தேவராசன் 4

திரு. கோ. முத்துப்பெருமாள், திரு. வேங்கடேசன்
(தலைக்கு 3 உருபா மேனி) 6

திரு. வீரராகவன், பாலகுசம்மாள், பேபி அம்மையார்
தலைக்கு 2-உருபா மேனி 6

திருவாளர்கள். குப்புசாமி, பொற்செழியன்,
செஞ்சடையான் (தலைக்கு ஓர் உருபா மேனி) 3

திரு. இரா. துரை, கவுந்தப்பாடி. 2

திரு. இ. தேவநேயன், (கரந்தைப்புலவர்
கல்லூரி) வழி 50

திரு, எசு. பாலாமணி, பெங்களூர்-3 5

திரு. ம. இராமசாமி பி. ஏ. சோமண்டாபுதூர். 101

திரு. தெ. சாலமோன் ராசு, கடுக்காய் வலசை 2

திரு. இ. தேவநேயன் வழி (இரண்டாம் முறை) 20

திரு. ஆ. விந்தன் (கவுந்தப்பாடி) வழி,
திரு. க. ஆறுமுகம் 1

| | |
|---|---|
| திரு. க. சி. கோவிந்தராசு, | 2 |
| திரு. ந. சுப்பிரமணியம், | 1 |
| திரு. பு. துரை. கவுந்தப்பாடி, | 1 |
| திரு. மகாலிங்கம், திருப்பூர் | 3 |
| திரு. கி. சற்குணன், பெ. மேட்டுப்பாளையம். | 1 |
| திரு. சு. கு. சாம், கோயம்புத்தூர் | 1 |
| திரு. நா. ஆறுமுகம் (ஆசிரியர், நீலிக்கோனம்பாளையம்) வழி, ஆசிரியைகள், மா. சரசு, வி. இந்திராணி, வை. அன்னபூரணி (தலைக்கு ஓர் உருபா மேனி) | 3 |
| உண்மை நெறிக்கழகச் செயலர், மல்லியகரை | 4 |
| திரு, ந. பழனிவேலு, தலைச்சாலை, சிக்கல் | 10 |
| திரு. பெ. மாரிமுத்து, ஆசிரியர், சிறுவங்கூர் | 1 |
| திரு. ஆ. விந்தன் வழி, திருவாளர்கள் குப்புசாமி, ஒலகடம்; மாரிமுத்து, செந்தாம்பாளையம்; க. அமராவதி, சலங்காபாளபம், துரை. கவுந்தப்பாடி; பாலசுப்பிரமணியம், | 5 |
| பு. கா. பாலசுப்பிரமணியம், செயலாளர். மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி | 1 |
| அவர்வழி ஆடலரசு, அறுவை வாணிகம் | 5 |
| இரா ஆறுமுகன், ஆடலரசு, அருணகிரி, சு. பால சுப்பிரமணியன், இளங்கோவன், (தலைக்கு ஓர் உருபா மேனி) | 5 |
| திரு. விந்தன் வழி, க. ம. சுப்பிரமணியம் கவுந்தப்பாடி | 3 |
| திரு. கு. சகதீசுவரன், குட்டிப்பாளையம் | 1 |
| ,, ம. ஆறுமுகம், கவுந்தப்பாடி | 1 |
| ,, நெல்லை க. இராமசாமி, சட்டக்கல்லூரி, சென்னை-1 | 1 |
| ,, ப. காளிமுத்து, தியாகராசர் கல்லூரி, மதுரை-9 அவர்வழி தியாகராசர் கல்லூரி மாணவர்கள் அன்பளிப்பு (முதல்முறை) | 15 |
| ,, கே. வேங்கடேசன், பெங்களூர்-21 | 1 |
| அவர்வழி, செ. செகந்நாதன், மு. சுப்பிரமணி (தலைக்கு 50 காசுகள் மேனி) | 1 |
| ,, கி. வேங்கடேசன் | 0-25 |
| ,, பொன். தங்கவேலன், பெங்களூர்-15 | 2-50 |

| | |
|---|---|
| அவர்வழி, திரு. செந்தமிழ்ச்செல்வன் | 2-50 |
| திரு. ப. எட்கார்குருசு, மா. நடராசன்; இல. கோ. சேதுராமன், இல. நடராசன், க. வேல் (தலைக்கு ஓர் உருபா மேனி) | 5 |
| ,, சி. இரத்தினசபாபதி, பி. இ., பூ. சா. கோ கல்லூரி கோவை-4. | 30 |
| ,, அ. சண்முகம், பழையூர்மேடு | 10 |
| ,, கு. சங்கரன், துக்குக்காடு | 1 |
| ,, சு. இளையபெருமாள், செ. கணபதி, ப. சதாசிவம், பெ. இராமசாமி, க. செல்வம், (தலைக்கு ஓர் உருபா மேனி) | 5 |
| ,, ஓ. சுந்தரமூர்த்தி . புலவர், துரவி | 2 |
| ,, க. சாந்தகுமாரி, பெங்களூர்-16 | 5 |
| ,, புலவர் நா. தண்டபாணி, வடகாடு | 2 |
| ,, அழ. அழகிரிசாமி, ஈப்போ, (மலேசியா) (மூன்றும் முறையாக) | 100 |
| ,, வ சுப்பையா, ஈப்போ (மலேசியா) | 100 |
| ,, அரங்க. இராசாராமன், வளவனூர் | 10 |
| ,, விழிநை, எழிலரசன், பெரப்பேரி | 1 |
| ,, புலவர் வி. கோவிந்தசாமி, கல்மண்டபம் | 5 |
| ,, செல்லராமு, கெ. கல்லுப்பட்டி | 4 |
| ,, தங்க. அன்புவல்லி, பட்டுக்கோட்டை | 5 |
| ,, அ. மூர்த்தி, கிண்டி, சென்னை-32 | 2 |
| புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றம் வழி, திரு. அ. வெள்ளியங்கிரி, ஆசிரியர், சாவக்கட்டுப்பாளையம் | 5 |
| ,, வி. என். சுப்பிரமணியம், குப்பிபாளையம் | 2 |
| ,, சென்னியப்பன், ஆசிரியர், சேயூர் | 2 |

தலைக்கு ஓர் உருபா கொடுத்தவர்கள் :

,, அ. மா. சுப்பிரமணியம், சர்வோதய சங்கம், நம்பியூர்; அ. கணேசன், நம்பியூர்; கு. சிவகணமதி, புதுஜயன்பாளையம்; கருப்புச்சாமி, நம்பியூர்;

கா. க. பழனிச்சாமி ; கா. ஆ. நாராயணசாமி ;
கா. கோ. தங்கவேல் ; முருகையன் ;
கா. ஆ. வேங்கடாசலம் ; கா. க. மாரப்பன் ;
கா. பெ. சீனிவாசன் (ஆசிரியர்கள் ,
காவலி பாளையம்) 10

,, ப. பழனிச்சாமி, தியாகராசர் கல்லூரி மதுரை 1
,, எசு. சங்கரநாராயணன், நாகர்கோயில் 1
,, அ. ஆறுமுகம், படியூர். 2
,, எம். பி. பழனிச்சாமி, மொடச்சூர் . 1
,, தனம் அரங்கராசன், நம்பியூர் . 1

பொங்கலூர் அன்பர்கள் :

,, ப. கு. பரமேசுவரன் 3
,, ச. இரத்தினம், 2
,, மா. மாரிமுத்து 2
,, பெருமாள், 1
,, து. இராதாகிருட்டிணன் 1
,, சொர்ணமணி 1
,, என். பார்த்தசாரதி, புதுவை . 5

இப்பட்டியலில் வந்த தொகை விளக்கம் :

| | | |
|---|---|---|
| க. | கடன் தொகை. பத்து உருபா வகை. | 10-00 |
| உ. | நூறு உருபா வகை. | 300-00 |
| ங. | அன்பளிப்புத் தொகை. | 727-50 |
| | மொத்தம் : | 1037-50 |
| | முன்மொத்தம் : | 4377-94 |
| | தொகுமொத்தம் : | 5415-44 |

(தொடரும்)

---

பிழை திருத்தம் :

37 ஆம் பக்கம் ஆங்கில ஆக்கப் பாட்டில் இரண்டாம் பாடல் இரண்டாம் வரியில் And the என்றிருப்பதை and She என்றும், மூன்றும் பாடல் ஐந்தாம் வரியில் Pulk and narrow என்றிருப்பதை Pith and marrow என்றும் ஆறும் வரியில் With erning என்றிருப்பதை Withering என்றும் திருத்திப் படிக்க வேண்டுகின்றோம் .

## தமிழர்களின் கைவேல்!

## தமிழ்நாட்டின் விடுதலை முரசம்

## தமிழர்களுக்குக் கிடைத்த உரிமைப் பட்டயம்

## தமிழ்நாட்டில் இயங்கும் ஒரே தனித்தமிழ்த் தாளிகை!

தென்மொழி

தென்மொழி என்றும் தன் கடமையை ஆற்றவேண்டாமா?
புல்லர்தம் பொய்மைச் சூறுவளிக் கிடையிலும் தமிழ்ப் பகைவர்களின் புரட்டுப் பேச்சுகளுக் கிடையிலும்,
தென்மொழி தயங்காது பாடாற்ற அதன்

**அச்சக அமைப்புக்கு உதவுங்கள்**

கடனுகவும், நன்கொடையாகவும், தங்கள் அன்பான, மேலான உதவியை இன்றே அனுப்பி உதவுங்கள்.

**தென்மொழி,**

கடலூர்-1.